விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 04 வியாழக்கிழமை (21.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# விடுதலைப்புலிகள் வளர்ச்சியடைய அன்றைய அரசுகளே காரணம்!


## கிழக்கு மாகாண முதலமைச்சர் சாட்சியம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் வளர்ச்சியடைவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவே காரணம். அன்று அவர் விடுதலைப் புலிகளுக்கு ஒருபுறம் உதவிக்கொண்டு மறுபுறம் புலிகளால் நிராகரிக்கப்பட்ட மாகாண சபை முறைக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் நேற்று புதன்கிழமை சாட்சியமளிக்கையிலேயே முதலமைச்சர் சந்திரகாந்தன் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர்மேலும் கூறியதாவது,

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளினால் கிழக்கு மாகாணத்தில் 600 பொலிஸார் பலவந்தமாக கொல்லப்பட்டமைக்கு விடுதலை புலிகளின் அப்போதைய கிழக்கு மாகாண தளபதியாக இருந்த (18ஆம் பக்கம் பார்க்க)



பிரித்தானிய மனித உரிமைப் பேரவையினால் வெளியிடப்பட்ட படம் இது...

## பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினாலாக தெரிவு



(கொழும்பு)

பாப்பரசர் ஒருவரை தெரிவு செய்யும் அதிகாரம் கொண்ட வத்திக்கான் கர்தினால் கல்லூரிக்கு இலங்கையில் இருந்து பேராயர் வணக்கத்துக்குரிய மல்கம் ரஞ்சித் நியமிக்கப்பட்டுள்ளார்.பாப்பரசர் 16 பெனடிக்ட் இந்த தெரிவை நேற்று அறிவித்துள்ளார்.

இவரை தவிர,19 கர்தினால்கள் பாப்பரசரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் உள்ள (18ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இறுதி யுத்தத்தின்போது 490 மில். பெறுமதியான தங்கம் மீட்பு

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 490 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் எடை 110 கிலோ என்றும் இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவு மற்றும் இராணுவப் பொலிஸார் ஆகியோரே அதனைக் கைப்பற்றினர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு இராணுவத்தின் பொறுப்பிலிருந்து அந்த தங்கம் படிப்படியாக மத்திய வங்கிக்குக் கையளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் மே மாத இறுதியில் ஒரே நாளில் மட்டும் புலிகளிடமிருந்து 200 கிலோ கிராம் எடை கொண்ட தங்கமும் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய ரூபா நோட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாக (18ஆம் பக்கம் பார்க்க)

## தேடப்படும் குற்றவாளிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

### விசாரணை அமர்வு நீதிபதி தெரிவிப்பு



(சென்னை)

1986இல் சென்னை சூளைமேட்டில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேடப்படும் குற்றவாளி தான் என சென்னை நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி பரஞ்சோதி தெரிவித்திருக்கிறார்.

1986 சம்பவத்தில் திருநாவுக்கரசு என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த வழக்கு விசாரணை சென்னை நான்காவது கூடுதல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவரை (18ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு சிம் அட்டைகளுக்கு மேல் எவரும் வைத்திருக்க முடியாது

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஒரு தனி நபரொருவர் வைத்திருக்கக் கூடிய சிம் காா்ட்டுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சும் இலங்கை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை ஆணைக்குழுவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதற்கேற்ப இனிவரும் காலங்களில் பெரும்பாலும் ஒருவருக்கு இரண்டு சிம் காா்ட்டுகளை மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக இருப்பதுடன் பயன்படுத்தப்படும் சிம்காா்டுகள் அனைத்தும் அதன் உரிமையாளர்களின் பூரண விபரங்களுடன் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருக்க (18ஆம் பக்கம் பார்க்க)

Meitro PC Systems
மங்கலகரமான திறப்பு விழா
MEITRO PC SYSTEMS
இன்று (21.10.2010) வியாழக்கிழமை காலை 7.32 மணி முதல் காலை 9.02 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் நடைபெறும்.
MEITRO PC SYSTEMS ஸ்தாபன மங்கலகரமான திறப்பு விழா நிகழ்விற்கு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Computer Sales & Services
All Brands Including D-Link DELL SONY
PC& Laptop Repairs
Internet Setup
Networking
Troubleshooting
Data Back Up
Hardware & Software
175/3, Kasturiar Road,
Jaffna.
(C-1444)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணிஐயர் ஜீவதாம்பாள்



அனலைதீவை பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சுப்பிரமணிஐயர் ஜீவதாம்பாள் நேற்றைய தினம் (20.10.2010) சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற யோ.சுப்பிரமணிஐயர் அவர்களின் அன்பு மனைவியும் இரவீந்திர குமாரக்குருக்கள் (நித்தியகுரு அருள்மிகு ஸ்ரீ வல்லீ புரநாதர் தேவஸ்தானம் கோண்டாவில்) தயாபரசர்மா ஆகியோரின் தாயாரும் பத்மசுலோசனா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் அனோஜ், லக்ஷிகா ,விஸ்ணுகா, ஸ்ரீதரசர்மா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 21.10.2010 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
சு.இரவீந்திரகுமாரக்குருக்கள்

(2709)




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00



## தேவை

புகைப்படத்துறைக்கு O/L ,A/L படித்த கணக்காளர் (பெண்) தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத் தக்கது.

தொடர்பு:-
0779234540

(2707)


## கிளிநொச்சி மகா வித்தியாலயம்

## தரம்-5 புலமைப்பரிசில் பாராட்டு விழா-2010

எமது பாடசாலையில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2009, 2010 ஆண்டில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழா நவம்பர் முதல் வாரத்தில் நடாத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. எனவே எமது பாடசாலையில் குறித்த ஆண்டுகளில் கல்வி கற்று சித்தி பெற்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் 25.10.2010 இன் முன்னர் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொலைபேசி:-
0212285414

பாராட்டு விழா ஏற்பாட்டுக்குழு,
கிளி/ கிளிநொச்சி ம.வி.

(ச-1446)

# கண்ணீர் அஞ்சலி



## சுப்பிரமணிய ஐயர் ஜீவதாம்பாள்

அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானத்தின் நித்தியகுரு சிவஸ்ரீ ரவீந்திர குமாரக் குருக்கள் அவர்களின் தாயார் 20.10.2010 அன்று இறைபதமடைந்தமையினால் துயருற்றிருக்கும் அன்னாரது உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீராம ஜெயம்! ஸ்ரீராம ஜெயம்! ஸ்ரீராம ஜெயம்!

பரிபாலன சபையினர்
அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்
கோண்டாவில் கிழக்கு.

(2710)

## ரூபவாகினி அலைவரிசையில் தேர்திருவிழா காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் உற்சவக் காட்சி நாளை மாலை 4.30 மணி தொடக்கம் 5.00 மணி வரை ரூபவாகினி அலைவரிசையில் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது. (ச)

## ஆசிரிய பயிற்சி நெறி விரிவுரை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தேசியக் கல்வி நிறுவகத்தால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான ஆசிரிய பயிற்சி நெறி விரிவுரைகள் யாவும் கல்வி அமைச்சரால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது. கல்வி அமைச்சிலிருந்து மறு அறிவித்தல் கிடைக்கும்வரை விரிவுரைகள் நடைபெறமாட்டாது என கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)


### தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)


# மரண அறிவித்தல்

## திருமதி கதிரவேலு புவனேஸ்வரி



வட்டு.மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு புவனேஸ்வரி நேற்று 20.10.2010 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், சுந்தரநடராசா (சுந்தரி), நடேஸ்வரி, சோமாஸ்கந்தராசா (சோமு), கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்), முருகானந்தன் (ஜானுசன் களஞ்சியம், ஆனந்தி), சத்தியசீலன் (ஜானுசன் ஆட்டோ சத்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலட்சுமிதேவி, மகேந்திரன் (வள்ளுவர்), சிதம்பரேஸ்வரி, தட்சாயினி(சுவிஸ்), வனிதா, சிவறஞ்சினி (மு.ப.ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுதாகரன் (சவுதி), சுஜாத்தா, சுஜித்தா, சுவர்ணா, சுபேசன், றமணேந்திரன் (பிரதேசசபை உத்தியோகத்தர்), கஜனி, காலஞ்சென்ற வரதன் (IT PARK), ஜானுசன் (சுவிஸ்), டினுசன் (சுவிஸ்), ஜஸ்மி (சுவிஸ்), மிதுசன், பேபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரஜீனாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மாவடிச் சந்தி, வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(2712)

# இன்று ஒரு தகவல்

## சித்தர்களின் சிந்தனை

மனித உடம்பில் 72 ஆயிரம் நாடி நரம்புகள் இருப்பதாக சித்தர்கள் சொல்கிறார்கள்.

இதில் முக்கியமானவை 24 நாடி நரம்பிகளாம். இந்த 24 நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் போலல்லாமல் உறக்கத்தி லேயே இருக்கிறதாம்.

இவற்றில் 10 நாடிகள் மேல் நோக்கியும் 10 நாடிகள் கீழ் நோக்கியும் இருக்கும். எஞ்சிய 4 நாடிகளும் இரு பக்கமும் இரண்டாக பிரிந்து போய் பாம்பு போன்று சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறதாம்.

இத்தகைய நாடி நரம்பிகளில் தான் உயிரின் ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கிறதாம்.

இந்த 24 நாடிகளிலும் 10 நாடிகள் மிகவும் முக்கியம். அந்த 10 நாடிகளிலும் 3 நாடிகள் மிகமிக முக்கியம்.

இந்த 3 நாடிகளுக்குள் தான் அந்த இரகசியமான உறக் கம் பொதிந்து கிடக்கிறதாம். இவை நம் உயிரை உடம்புடன் இணைத்துக் கொண்டு இயங்குகிறதாம்.

இந்த நாடிகளின் 3 வாயுக்களுக்கும் 3 பெயர் உண்டு. இடகலை, பிங்கலை, சுழுமுனை.

சந்திரன்- சூரியன் -அக்கினி என்றும் இதைச் சொல் வதுண்டு.

இடது நாசியில் இழைகிற மூச்சு இடகலை.

வலது நாசியில் இயங்கும் மூச்சு பிங்கலை.

சுழுமுனை என்பது இரண்டு நாசியலும் வந்து போய் இயங்கும் சுவாசம்.

இந்த 3 மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நம் சித்தர்கள் சொல்லியிருக்கும் இரகசியத்தையெல்லாம் வெளிநாட்டவர் கள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

சிறிது காலத்துக்கு முன் லெனின் கிராட் பல்கலைக்கழகத் திலிருந்து டாக்டர் மெஸ்ஸிங் என்று ஒருத்தர் இந்தியாவுக்கு வந்தாராம்.

விஞ்ஞானப் பேராசிரியரான அவர் இமயமலைச் சாரலில் வந்து சிறிது காலம் தங்கினாராம். அங்குள்ள சில யோகிகளி டம் பழகினாராம். Self induced cataleptic state என்ற மூச்சு வித்தையைப் பற்றி தெரிந்து கொண்டு போனாராம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

"இந்தியாவில் இருக்கும் சித்தர்கள் பல வாரங்கள் மூச்சுவிடாமல் - மரக்கட்டை மாதிரி- உயிர் இருந்தும் இல் லாதது போன்று - ஒரு யோக சமாதி நிலையில் இருக் கிறார்கள். என்னால் இப்பொழுது 3 நாட்கள் வரைக்கும் அப்படி இருக்க முடிகிறது. அதற்கு மேலேயும் அது மாதிரி இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொன்னாராம்.

இந்த 3 மூச்சுக்களைப் பற்றி சித்தர்களின் நூலில் இன் னும் சில இரகசியம் இருக்கிறதாம்.

வளர்பிறை முதல் 3 நாள் - அதாவது அமாவாசை கழித்து மறு நாளிலிருந்து 3 நாள் - காலையில் எந்த நாசி எப்படி இயங்கும் என்ற கணக்கை கண்டுபிடித்து சொல்லியிருக் கிறார்களாம்.

நான்காம் நாளிலிருந்து 6 ஆம் நாள் முடிய இது மாறும். அதன் பின் 7 ஆம் நாளிலிருந்து முதல் 3 நாள் மாதிரி மறு படியும் இயங்கும். இப்படியே மும்மூன்று நாட்களுக்கு இந்த இடகலையும் பிங்கலையும் மாறி மாறி ஒரு சட்டதிட்டத்தின்படி வேலை செய்கிறது.

இப்படிஇருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக் கிறது என்று அர்த்தம்.

இந்த இரண்டும் தவிர சுழுமுனை என்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகிறது என்பதற்கும் ஒருவாய்ப்பாடு இருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். காலையில் எழுந்ததும் மூச்சு எந்த நாசியில் எப்படி இழைகிறது என்பதை வைத்து சில விட யங்களை புரிந்து கொள்ள முடியுமாம்.

இப்பொழுது உதாரணத்துக்கு ஒரு நாள் இரவு முழுவதும் ஒரு நாசியில் மூச்சு ஓடிக்கொண்டிருந்தால் அந்த உடம்புக்கு 3 வருடத்துக்கு மேல் உயிராற்றல் இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாமாம்.

இரவு முழுவதும் இடகலையும் - பகல் முழுவதும் பிங் கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தால் அந்த மனிதன் 6 மாதத்தில் மரணத்தை நெருங்குகிறான் என்று அர்த்தம்.

ஆகாயத்திலுள்ள நட்சத்திரம் பார்வைக்கு தெரியாவிட்டால் ஐந்து நாட்களில் மரணமாம். மூக்கு நுனி தெரியவில்லை என் றால் 3 நாட்களில் முடிவாம் இப்படியெல்லாம் சொல்லுதாம் சித்தர் இலக்கியம்.

நாமெல்லாம் இதை முடிந்தளவுக்கு புரிந்து கொண்டால் நீண்டநாட்களுக்கு ஆரோக்கியமாக இருக்க முடியுமாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும்

## ரவிகருணாநாயக்க எம்.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

அடுத்த வருடம்அரசாங்க ஊழி யர் களுக்கான சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிக ரிக்க உள்ளதாக அரசாங்கம் அறி வித்துள்ளது. இச்சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் படி நாங்கள் அரசாங்கத்தை வலி யுறுத்துகிறோம் என எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை எதிர்கட்சி யின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் அர சாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துக் கொடுப்பதாக அரசா ங்கம் கூறிவருகிறது. ஆனால் 3 வருடங்கள் ஆகியும் இன்னும் அவர்களது சம்பளம் அதிகரிக்கப் படவில்லை. இந்நிலையில் அடுத்த வருடம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவாக அதி கரிக்கப்போவதாக அரசாங்கம் அறி வித்துள்ளது. இந்தச் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண் டும்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்த இந்த 2 ஆயிரத்து 500 ரூபாய் சம்பளம் போதுமானதாக இல்லை. அரசாங் கம் நாளுக்கு நாள் பாண் விலை, பருப்பு விலைகளை அதிகரித்துக் கொண்டு வருகிறது.

உள்நாட்டை அபிவிருத்தி செய் வதாகக் கூறிக்கொண்டு வெளி நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங் களுக்கு மாதம் 12 மில்லியன் ரூபா வினை செலவிடும் அரசாங்கம் அதை நிறுத்தி அந்த தொகை யிலிருந்து 10ஆயிரம் சம்பளத்தை வழங்கினால் வாழ்க்கைச் செல விற்கு அது போதுமானதாக அமை யும்.

அதேவேளை உள்ளூர் வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஊடக சுதந்திரத்தில் இவ்வருடம் 158 ஆவது இடத்தில் இலங்கை

பிரான்ஸ் தலைநகர் பாரி சை தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமை ப்பு என்கிற ஊடக சுதந்திர பாதுகாப்புக்கான சர்வதேச அமைப்பு நேற்று உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருக் கும் புள்ளிவிபரத்தின் படி ஊடக சுத ந்திரத்தில் இவ்வருடம் இலங்கை 158 ஆம் இட த்தில் உள்ளது.

இவ்வமைப்பு சர்வதேச நாடுகளில் ஊட க சுதந்திரம் எப்படி இருக்கின்றது? என ஆராய்ந்து வருடா வருடம் கணிப்பீடு வெளியிடுகின்றமை வழக் கம்.

இவ்வருடம் 178 நாடுக ளில் ஊடக சுதந்திர நிலைமை களை ஆராய்ந்தது.

ஊடக சுதந்திரத்தில் இலங்கை 158 ஆம் இடத்திலும் இந்தியா 122 ஆம் இடத்திலும் பாகிஸ்தான் 151 ஆம் இடத்திலும் மற்றும் சீனா 171 ஆம் இடத்திலும் உள்ளது என இப்புள்ளி விபரம் கூறுகின்றது.

கடந்த காலங்களைக் காட்டி லும் ஊடக சுதந்திரம் இலங்கை யில் மேம்பட்டிருக்கின்றது என்றும் உள்நாட்டு போர் முடிவுக்கு வந் திருப்பதே இதற்குக் காரணம் என் றும் ஊடகவியலாளர்கள் அமைப் பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*21.10.2010*
*(ஐப்பசி 4, வியாழக்கிழமை)*
*சதுர்த்தசி முழுவதும்*
*உத்தரட்டாதி முன்னிரவு 7.36 மணிவரை*
*இராகுகாலம்-1.32-3.02 மணிவரை*
*சுபநேரம்-7.32-9.02 மணிவரை*

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடியநேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**இடபம்** செவாக்கு மேலோங்கும்நாள், பயண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும், பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள்.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொல்லை கொடுத்தவர்கள் மனம்மாறி தொழில் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**கடகம்** சொத்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் சுமுகமாக முடியும், தேவையென நினைத்த பொருளொன்று எளிதில் கிடைக்கலாம், பிரயாண நன்மையுண்டு.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் சில பிரச்சினைகளுக்குட்படலாம், பிரயாண பயமுண்டு, அபகீர்த்தி ஏற்படலாம், எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**கன்னி** வாழ்க்கைத்துணை வழியே வசந்தம் வந்து சேரும், புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், திருமண முயற்சி கைகூடும், அபூர்வ நண்பர்கள் சந்திப்புண்டு.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், பிள்ளைகளால் சிறுசிறு வருமானங்களுண்டு, அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், வெளியூர் தொடர்புகளால் நன்மை உண்டு.

**விருச்சிகம்** சுபசெய்திகள் வந்து சேரும், சொல்லைச்செயலாக்கிக் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமை க்குரிய சம்பவங்கள் நடைபெறும், சொத்துக்களால் இலாபம் கிடைக்கும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்படும், சகோதர வழியில் ஏற்பட்ட கசப்புகள் அகலும், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், வெளியோரின் சந்திப்பால் பெருமைப்படும் நாள், வீட்டுத் தேவைகளைப்பூர்த்தி செய்துகொள்வீர்கள், பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்** பயணங்களால் பலன் கிடைக்கும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்து கவலைகள் தீரும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள் வீர்கள்

**மீனம்** பக்குவமாக நடந்துகொண்டுபாராட்டுப் பெறும் நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகலாம், உறவினரிடம் கோபத்தைக் குறைப்பது நல்லது.

வளவன்

# மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம்

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி சங்கத் தானை இந்துக் கல்லூரி க்கு முன்பாக கடந்த ஞாயிற் றுக் கிழமை இடம்பெற்ற இரு மோட்டார் சைக்கிள் விபத் தில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் இ.தர்மே ந்திரா என்பவர் படுகாயம டைந்துள்ளார்.

இவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசா லை யில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளார். (ஸ்ரீ-37)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 130 | 100 | 100 |
| தக்காளி | 80 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 80 | 100 | 70 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 90 | 110 | 55 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 140 | 70 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 150 |
| போஞ்சி | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 40 |



யாழ்.எயிட் அமைப்பினால் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.எயிட் அமைப்பின் திட்ட அலுவலர் ஆர்.தர்மினி உரையாற்றுவதையும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, திட்ட அலுவலர் ஆர்.தர்மினி ஆகியோர் மாணவர்களிடம் பாதணிகளை கையளிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# பரத நாட்டிய முதுநுண்கலைமாணி பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம்

## இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் பங்கேற்கவுள்ளார்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் இந்தியாவின் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்டுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டுவரும் பரத நாட்டிய பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் முது நுண்கலைமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர் ளுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு ஆயர் அருட்கலாநிதி யோசவ் ஸ்ப்பிற் றெறி ஆண்டகை, சிறப்பு விருந்தினாக இந்தியா வின் திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி கலாநிதி மார்க்கறெற் பஸ்ரின் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந் நிகழ்வில், முதலாவது அமர்வில் பரத நாட்டி யத்தில் முதுநுண்கலைமாணி பட்டம் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். இதன்போது வரவேற் புரையை கலைத்தூது அழகியல் கல்லூரி யின் அதிபர் திருமதி.பி.எவ்.சின்னத்துரை வழங்குவார்.

தொடர்ந்து பேருரையை கலைக்காவிரி நுண்கலைக்கலைக் கல்லூரியின் அதிபர் வழங்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து வத்திக் கான் தூதுவரின் சிறப்புரையும் அதனைத் தொடர்ந்து சர்வமதத் தலைவர்களின் அருளுரைகளும் இடம்பெறும்.

அதன் பின்னர் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நி.மரியசேவியர் அடிகளார் உரை யாற்ற பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

இரண்டாவது அமர்வில் முதுகலைமாணி கற்றைநெறியை கலைத்தூது அழகியல் கல்லூரியில் பயிற்றுவித்த ஆசிரியர்களுக் கான கௌரவிப்பும் சிறப்புரைகளும் இடம் பெறும்.

சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக் கழக ஓய்வுபெற்ற சமஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி வி.சிவசாமி, யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை தலைவர் ஆகியோர் வழங்குவார்கள். (ஸ்ரீ-2)




# ஊடகமும் சமூக அபிவிருத்தியும் பற்றிய கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

ஊடகமும் சமூக அபிவிருத்தியும் என்ற தொனிப்பொருளில் சனசமூக நிலைய நிர் வாகிகளுக்கான கருத்தரங்கு நாளை வெள் ளிக்கிழமை ஜும்மா பள்ளிவாசல் வீதியில் இருக்கும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் (MRTC) நடைபெறவுள்ளது.

ஊடகவள இயக்குநர் சுவாமிநாதன் விமல் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் காலை 9 மணிக்கு ஆரம் பித்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார் "உள்ளூராட்சி மன்றமும் சனசமூக நிலையமும்", தே.தேவானந் "ஊடகமும்சமூக மும்" பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை "சமூக அணிதிரட்டலும் அபிவிருத்தியும்" மற்றும் கு.பதீதரன் "மாறும் தொழில் நுட்பமும் ஊடகமும்" ஆகியன பற்றிய கருத் துக்கள் வழங்கவுள்ளதாக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை மருத்துவ சங்கத்தின் மருத்துவ மகாநாடு நாளை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவ சங்கம் தனது இவ் ஆண்டிற்குரிய ஸ்தாபித மருத்துவ மகா நாட்டை யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின ருடன் இணைந்து நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடாத்தவுள்ளது.

முதன் முதலாக கொழும்பிற்கு வெளியே நடைபெறுகின்ற இந்த ஸ்தாபித மகா நாட்டின் பிரதம விருந்தினராக உலக சுகா தார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி வைத்தியகலாநிதி ஃபிட்ரோசி றஸ்ரம் மேற்றா கலந்துகொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

ஆரம்ப விழாவில் அறக்கொடை விரிவு ரையை வித்யாஜோதி ஈ.எம்.விஜேராமா, நிகழ்த்தவுள்ளார்.வாழ்நாள் பேராசிரியரு மான வைத்திய கலாநிதி கொல்வின் குணரட்ன "தொழில் சார்ந்து பயணிக்கும் மருத்துவப் பேராசிரியர் ஒருவரின் பிரதிபலிப்புக்கள்" எனும் தலைப் பில் உரை ஆற்றுவார்.

இந்த மகாநாட்டில் டெங்குக் காய்ச்சல், பாம்புக்கடி, போஷாக்கு, ஆய்வுக்கான ஒழுக்கக் கோட்பாடுகள், மனிதாபிமான நெருக்கடி நிலைகளில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தொற்றுக் கட்டுப்பாடு எனும் தலைப் புகளில் முன்னணி வைத்திய நிபுணர்கள் இணைந்து குழுநிலை அறிக்கைகளை வழங்கவுள்ளனர்.

இவற்றோடு "வட கிழக்குப் பகுதிகளில் உலக சுகாதாரஸ்தாபனத்தின் வகிபாகம்" எனும் தலைப்பிலான விருந்தினர் விரிவுரை யும் "ஆய்வுகளை அளிக்கை செய்தல்" என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையும் இடம்பெறவிருக்கின்றன. இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவென பல வைத்திய நிபுணர் கள் நாட்டின் ஏனைய பாகங்களிலிருந்து வருகை தந்துள்ளனர்.

இந்த மகாநாட்டில் சிறப்பு அம்சங்களில் ஒன்றான சேர் மார்க்ஸ் பெர்னாண்டோ உரையை வைத்தியகலாநிதி ஷிகான் வில்லி யம்ஸ் " அறளை நோயை நேரகாலத்துக்கே அடையாளங் காணுதல்" என்னும் தலைப்பின் கீழ் நிகழ்த்தவுள்ளார்.

மேலும் கலை நிகழ்வுகளை வைத்தியத் துறையினரும் ஏனைய துறைசார் கலைஞர் களும் இணைந்து வழங்கவுள்ளதாக யாழ். மருத்துவ சங்கச் செயலாளர் சு.பிரேமகிருஷ்ணா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உடுவில் கல்விக் கோட்ட மட்டத்தில் உள்ள பாடசாலை களில் இவ்வாண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 125 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாண வர்களைப் பாராட்டும் நிகழ்வு நாளை வெள் ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலய கல்யாண மண்டபத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பூமாதேவி மகாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக 306,பி 1 மாவட்டத்தின் முதலாவது உப மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்தா பெர் னான்டோ (எம்.எச்.எப்.)மற்றும் லயன் சீமாட்டி ஆஷா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக் கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சுகாதாரம், நீரிழிவு விழிப்புணர்வு மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் வி.தியாகராஜா(எம்.ஜெ.எப்) மற்றும் மாவட்ட கல்வித் தலைவர் லயன் வி. மாணிக்கம் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்து கொள்வார். (ஸ்ரீ-2)



இளவாலை முள்ளானை பிரதான வீதி கிராம மீள் எழுச்சித்திட்ட நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டது. இவ் வீதியைப் படங்களில் காணலாம். (படங்கள்: இளவாலை செய்தியாளர்)

# பனம் விதைகள் நடுகை செய்யும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கன் சிலோன் மிசன் ஏற்பாட்டில் பிற நாடுகளின் பணிக்கான தாய்ச்சங்கமா கிய அமெரிக்க ஆணைக்குழுவின் 200 ஆவது ஆண்டு விழா நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசம், கிழக்குப் பகுதி மற்றும் மலையகம் ஆகிய நான்கு பிராந்தியங்களில் 8 ஆயிரம் பனம் விதை கள் நடுகை செய்யப்படவுள்ளன.

மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங் களில் பயன் தரு மரங்களும் நடுகை செய் யப்படவுள்ளது.

அத்துடன் அமெரிக்கன் மிசனால் ஆரம் பித்து வைக்கப்பட்ட பாடசாலைகள் சில வற்றில் இத்தினத்தன்று சிரமதானப் பணிக ளும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (ஸ்ரீ-2-6)

## ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும்

# சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட தன் காரணமாக வட-கிழக்கு கிராம அலுவலர்கள் பாதிப்பு

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயதிற்கு மேல் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் சந்தர்ப்பம் நிறுத்தப்பட்டமையால் வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கால போர் சூழலில் பாதிக்கப்பட்ட நிலையிலும் தமது சொத்துக்கள், உறவுகளை இழந்து உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து, மக்களின் தொடர்ச்சியான இடம்பெயர்வு முதல் மீள் குடியேற்றம் வரையிலும் கடமையாற்றி வரும் இவ் வேளையில் 60 வயதிற்கு மேல் கிராம உத்தியோகத்தர்கள் சேவையாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை சுதந்திர கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன ஒன்றிணைந்து ஜனாதிபதி மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரவையும் மாகாண முதலமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கடிதம் மூலம் கேட்டுள்ளன.

வடக்கு ,கிழக்கு மாகாணங்களிலிருந்து 60 வய திற்கு மேல் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் சந்தர்ப்பத்திற்கான அனுமதி கோரி பிரதேச செயலாளர்கள் அரசாங்க அதிபர்கள் ஊடாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு விண்ணப்பித்திருந்த விண்ணப் பங்கள் யாவும் அமைச்சிலிருந்து அமைச்சரவைத் தீர்மானத்தின்படி வழங்க முடியாது என மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இதனால் கவலையடைந்துள்ள கிராம உத்தியோகத்தர்கள் யுத்தச் சூழ் நிலையில் பல வருட காலமாக பல கஷ்டங்களுக்கு மத்தியில் மக்களுக்கான சேவையாற்றியும் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டு ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்களின் போது கடமையாற்றியும் தற்போது சமாதான சூழ் நிலையில் மேலும் சேவையாற்ற விரும்புகின்ற இவ்வேளையில் அமைச்சரவையின் முடிவானது தம்மைப்பாதித்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பல கிராம உத்தியோகத்தர்கள் போரினால் மரணமடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர் என்றும் இரு சங்கங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஸ்ரீ-2)

# மன்னார் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(மன்னார்)

மன்னார் தமிழ்ச்சங்க ஏற்பாட்டில் நடைபெறும் மன்னார் தமிழ் செம்மொழி மாநாடு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை இரு வேறு அரங்குகளாக நடைபெறவுள்ளது.

இதனையொட்டி தினமும் மன்னார் நகர மண்டபத்தில் கலையரங்கு நிகழ்வும் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி யில் காயத்திரி பப்ளிகேஷனின் நூல் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் ஆய்வரங்கமும் நடைபெறவுள்ளன.

முதலாவது நாள் நிகழ்வுகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

காயத்திரி பப்ளிகேஷனின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துருவில் உள்ள படைப்புக்களை அச்சுருவேற்றி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், சிறுவர் கதைகள், இருப்பதைந்து இளம் கவிஞர்களின் கவிதைகள், புதுமுக எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான கல்வி சார்ந்த நூல்கள், உளவியல் நூல்க்ள், கணனி நூல்கள் அச்சேற்றப்படவுள்ளன.

இந் நூல்களைக் கண்காட்சி அலுவலகத்தில் கையளிக்க முடியும் என்பதுடன் ஆக்கங்களை அச்சுரு ஏறாத நூல்களை எமது நூல் தரப்படுதல் குழுவிற்கு வே. நவமோகன், காயத்திரி பப்ளிகேஷன், 9 -1/1 , ஸ்ரீசரணங்கர றோட், பாமன்கடை,. தெஹிவளை (தொலைபேசி -4881906) என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு காயத்திரி பப்ளிகேசன் இயக்குனர் அறிவித் துள்ளார்.

(ஸ்ரீ)

# மட்டக்களப்பில் கடந்த ஒரு மாதத்தில் 98 போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது

(கொழும்பு)

கடந்த ஒரு மாத காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 98 பேரை மாவட்ட மதுவரி திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாக மாவட்ட மதுவரி பொறுப்பதிகாரி எஸ்.தேவராஜன் தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் மாதம் முழுவதும் மதுவரி அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் சிக்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத சாராயம், கள்ளு,பியர் ஆகியவற்றை விற்பனை செய்த 90 பேரும் கசிப்பு விற்பனை செய்த 7 பேரும் போலி சிகரெட் விற்ற ஒருவருமாக மொத்தம் 98 பேரை இவ்வாறு கைது செய்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவர்களுள் பலர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் சிலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் மதுவரி திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## 23ஆவது நினைவஞ்சலி

21.10.1987, 22.10.1987 அன்று கடமையின் போது மரணித்த யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களை நெஞ்சநெகிழ்வுடன் நினைவுகூருகின்றோம்.

- வைத்தியநிபுணர் அ. சிவபாதசுந்தரம்
- வைத்தியநிபுணர் கே. பரிமேலழகர்
- வைத்தியநிபுணர் கே.கணேசரத்தினம்
- திருமதி.பா.வடிவேல்
- செல்வி.இ.மங்கையற்கரசி
- செல்வி. மு.லீலாவதி
- திரு.கே.செல்வராசா
- திரு.கே.கிருஸ்ணராசா
- திரு.மு.துரைராசா
- திரு.எம்.சண்முகலிங்கம்
- திரு.வி.வரதராசன்
- திரு.கே.வேதாரணியம்
- திரு.யோன்பீற்றர்
- திரு.இ.சுகுமார்
- திரு.க.சிவயோகநாதன்
- திரு.எஸ்.ஜெகநாதன்
- திரு.கே. சிவராசா
- திரு.கோ.உரித்திரன்
- திரு.க.மார்க்கண்டு
- திரு.இ.இரத்தினராசா
- திரு.க.நவரத்தினம்

இவர்களின் ஆத்மா சாந்தியைப் பெறவும் உற்றவர், உறவினர் ஆறுதல் பெறவும் இறைவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(சி-1441) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



யாழ். மண்ணின் கல்வி எழுச்சிக்கு அரும்பணியாற்றும்

**பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி அவர்கள்**

(முதுநிலை விரிவுரையாளர் , முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அண்மையில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றமையைக் கௌரவிக்கும் முகமாக நடாத்தப்படும்

## பாராட்டு விழா



**இடம்:-** அத்தியார் இந்துக் கல்லூரி பிரதான மண்டபம், நீர்வேலி

**காலம்:-** 22.10.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி

**தலைவர்**
திரு.இ.குணநாதன்
(அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.)

## நிகழ்ச்சி நிரல்

01. கல்லூரி முகப்பு வாயிலில் இருந்து வரவேற்பு
02. மங்கல இசை : சுதா குழுவினர், கல்வியங்காடு
03. மங்கல விளக்கேற்றல்
04. வரவேற்புரை: திரு.சி.திரிகரன் (அதிபர், ஊரெழு கணேசா வித்தியாலயம்)
05. தலைமையுரை
06. **ஆசியுரைகள்**
    - பிரம்மஶ்ரீ.ஆ.சந்திரசேகரக்குருக்கள் (பிரதம குரு, வாய்க்கற்றரவை விநாயகர் தேவஸ்தானம்)
    - பிரம்மஶ்ரீ.கு.தியாகராஜக்குருக்கள் (நீர்வைமணி) (பிரதம குரு, செல்லக் கதிர்காமசுவாமி கோவில், நீர்வேலி)
    - அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)
07. **வாழ்த்துரைகள்**
    - பேராசிரியர் க.தேவராஜா (பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
    - பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி (தலைவர் மெய்யியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
    - திரு.சி.சிவநேசன் (சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் காப்பாளர், அகில இலங்கை அமுதசுரபிக் கலாமன்றம்)
    - திரு.வ.ஆறுமுகம் ( முன்னாள் அதிபர், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
    - திரு.வே. பாலசுப்பிரமணியம் (அதிபர், அச்சுவேலி மத்திய கல்லூரி)
    - திரு.இ.ராஜமகேந்திரன் (அதிபர் , ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
    - திரு.ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்)
    - திரு.ச.லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**கௌரவிப்பு**
**ஏற்புரை : விழா நாயகர்**
**நன்றியுரை: திரு.த.பரராசசிங்கம் ( சமாதான நீதிவான்)**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(இ) விழா ஏற்பாட்டுக் குழு.





மகாத்மா காந்தியின் 141 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்திய நினைவு நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவை சங்கத்தலைவர் ஆ.வடிவேலு, பொருளாளர் மா.லீலாவினோதன் ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்வதனையும் முதல்வர் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட காந்தி பற்றாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் இரா.சம்பந்தன் சாட்சியமளிக்கவுள்ளார்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் விரைவில் சாட்சியமளிப்பார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

எதிர்வரும் சில வாரங்களுக்குள் சம்பந் தன் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் சாட்சியளிப்பார் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை அடிப்படையில் இந்த ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பில் தமக்கு உடன்பாடு கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகமாக தமது சமூகம் காணப்படுகின் ற தென சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட் டுள்ளார்.

யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை பதிவுசெய்யும் நோக்கில் தமது கட்சி உண்மையைக் கண்ட றிந்தும் ஆண்ணக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க உள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு மேலதிக புளொட் அமைப்பும் உண்மையைக் கண்ட றியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்கத் திட்டமிட்டுள்ளதுடன் இதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமாறு புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட ரஞ்சன் ராமநாயக்க திட்டம்

(கொழும்பு)

தாம் கைதுசெய்யப்பட்டபோது, தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக கூறி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினரும், பிரபல சிங்கள திரைப்பட நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க, பொலிஸ் மற்றும் புலனாய்வு பிரிவினருக்கு எதிராக மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளார்.

இதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை கள் மேற்கொண்டு வருவதாகவும் அடுத்த சில தினங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு எதிராக மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்படும் எனவும் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தான் தங்கியிருந்த வீட்டின் பணியாளர் களைத் தாக்கிவிட்டு, கதவுகளை உடைத்துக் கொண்டு, வீட்டுக்குள் புகுந்த பொலிஸாரை மிகவும் தரக்குறைவான முறையில் தன்னை கைது செய்து அழைத்துச் சென்ற தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் மக்களின் வாக்குகளில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் தமது சிறப்புரிமைகள் குறித்து கவனத்தில் கொள்ளாது பொலிஸார் செயற் பட்டனர் என்பதால், தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# போலி ஆவணங்களை அடையாளம் காணும் புதிய தொழில்நுட்பம்

## குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் அறிமுகம்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் போலிஆவணங்களை அடையாளங் காணும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்த தொழில்நுட்பம் மூலம் உண்மை யான மற்றும் போலியான கடவுச் சீட்டுக்கள், வீசாக்கள் மற்றும் அடையாள அட்டைகளை இனங்காண முடியும்.

இதற்காக அதிகாரிகள் பயிற்றப்பட்டுள் ளதாக குடிவரவு , குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப்புதிய தொழில்நுட்பத்தை இலங் கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கத்தே க்ளுக்கமான் ஆரம்பித்து வைத்துள் ளார். இந்தத் தொழில்நுட்பத்திற்காக 30 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சித் திருத்த சட்டமூலத்திற்கு மத்திய மாகாண சபையில் இணக்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி நிறுவனங்கள் சட்டமூலம் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்டமூலங்களுக்கு மத்திய மாகாண சபை நேற்றுமுன்தினம் ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண சபையின்மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் பள்ளேகல மாகாண சபை மண்டபத்தில் சபைத் தலைவர் சாலிய திசாநாயக்க தலைமையில் நடை பெற்றது.

உள்ளூராட்சி திருத்த சட்டமூலத்துக்கு மத்திய மகாண சபையின் இணக்கத்தைப் பெறுவதற்காக பாராளுமன்றத்திலிருந்து முதலமைச்சருக்கு சட்டமூலப் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

அவசரமாக இச் சபையில் அதனை சமர்ப்பிப்பது பற்றி எதிர்க்கட்சிகள் எதிர்ப் பினை தெரிவித்தபோதும் இறுதியில் விவா தத்துக்கு எடுக்கப்பட்டு ஒரு மணியளவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பின்னர் ஏகமன தாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# கும்பாபிஷேகம்

(தனங்கிளப்பு)

மறவன்புலோ, புலோக்காரு நரசிம்ம வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-37)

# பாடசாலைகளுக்கிடையிலான உறவுகளை பலப்படுத்தும் புதிய நிகழ்ச்சித் திட்டம்

## கல்வியமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையில் உறவைப் பலப்படுத்தும் நோக்குடன் பாசமுள்ள பாட சாலை எனும் புதிய நிகழ்ச்சித்திட்டமொன்று கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சமாதான மற்றும் சமூக உறவுப்பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், சமூகங்களுக்கிடையில் நல்லு றவை ஏற்படுத்துவதற்கு சிறந்த இடம் பாட சாலைகளாகும். பாடசாலைகளை மையப் படுத்தி சமூகங்களுக்கிடையில் சமாதானத் தையும் புரிந்துணர்வையும் வளர்க்குமுகமா 'தெனுவர மித்ரோ' எனும் நிகழ்ச்சித் திட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக கிழக்கிலுள்ள பாடசாலை மாணவர்களையும் தெற்கிலுள்ள பாடசாலை மாணவர்களையும் ஒரே இடத்தில் சந்திக்கச் செய்து வதிவிட நிகழ்ச்சிகள் அவ்விரு பாடசாலை மாணவர் களுக்கிடையே நடத்தப்பட்டன.

இதன்மூலம் அம்மாணவர்களிடையே ஒரு பிரதேசப் பாடசாலையின் கலை, கலா சார மொழி பாவனை மற்றும் இதர விடயங் களை இன்னுமொரு பாடசாலை மாணவர் கள் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன்,

இந்நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவ, மாணவிகளிடையே இன்றும் உறவு நீடிப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாக அவர் கூறினார்.

இவ்வாறானதொரு புதிய நிகழ்ச்சித் திட்ட மான 'செனகவே தக்சலாவ' பாசமுள்ள பாட சாலை எனும் பெயரில் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பாட சாலை மாணவர்களிடையே மாத்திரமின்றி பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரி யர்களிடையே நல்லுறவையும் புரிந்துணர் வையும் தோற்றுவிக்கும் முகமாக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மொழி பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் களை தெற்கிலுள்ள சிங்கள மொழிப் பாட சாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் ஒரே இடத்தில் சந்திக்கச் செய்து அவர்களிடையே அவரவர் பிரதேச சமூக கலை, கலாசார விழுமியங் கள் தொடர்பான விடயங்களையும் பாடசாலை களின் முன்னேற்றம், நடவடிக்கைகள் தொடர் பான விடயங்களையும் பகிர்ந்து கொள்ளச் செய்யவும் ஒரு பாடசாலையின் கலை, கலாசார விளையாட்டு விழாக்களில் மற்று மொரு பாடசாலையை கலந்து கொள்ளச் செய்யவும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் வெடிமருந்து மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் வெடி மருந்தும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நரக முல்லை பிரதேசத்திலிருந்து ஒன்பது கிலோ எடை யுள்ள சி 4 ரக அதிசக்தி வாய்ந்த வெடி மருந்து மற்றும் பெருந்தொகையான பல்வேறு வகை துப்பாக்கி ரவைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயக்கொடி தெரி வித்தார்.

கரடியனாறு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் படையினர் நடத்திய பாரிய தேடு தலின் போதே இவைகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நவம்பர் 25 இல் ஆட்சேப மனுத்தாக்கல் செய்ய ரணில், திஸ்ஸவுக்கு அனுமதி

(கொழும்பு)

தம்மை ஐ.தே.க. விலிருந்து நீக்குவதற்கு எதிராக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தாக்கல் செய்த வழக்கில் ஐ. தே. க. தலைவர் ரணில், பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆட்சேப மனு தாக்கல் செய்வதற்கு கொழும்பு மாவட்ட நீதி மன்றம் அனுமதி வழங்கியது.

அரசியலமைப்பின் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தால் தம்மை ஐ.தே.க. விலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் அதனை நிறுத்தும்படி நீதிமன்றத்தின் ஆணை கோரும் மனுவை மனுஷா நாணயக்காரா, உபெக்ஷா ஆகியோர் தாக்கல் செய்தனர்.

இதன் அடிப்படையில் இவர்களை ஐ.தே.க. விலிருந்து நீக்குவதற்கு இடைக்கால தடையுத்தரவு நீதிமன்றால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் மனு நீதிமன்றத்தின் கவனத்தில் எடுக்கப்பட்டபோது ரணில் விக்கிரமசிங்கவும் திஸ்ஸ அத்தநாயக்கவும் தமது சார்பில் பேச வழக்குரைஞர்களை நியமித்தது டன் எதிர்வாதம் செய்ய வேறு திகதியொன்று தரும்படி நீதிமன்றத்தை வேண்டிய போது அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி இவர்கள் தமது வாதத்தை தொடர நீதிபதி அனுமதித்து வழக்கை ஒத்திவைத்தார்.

(ஸ்ரீ-2)

# மிஹின் லங்கா விமான சேவைக்கடனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு

## ஐ.தே.க. தெரிவிப்பு

மிஹின் லங்கா விமான சேவை கடனினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்படக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மிஹின் லங்கா நிறுவனம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாகவும், அதற்கு 250 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வது அனாவசியமானதெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட கடனினால் நாடு மேலும் பொருளாதார சரிவை எதிர்நோக்கும் எனவும் மிஹின் லங்காவை நடாத்திச் செல்வதற்காக இதுவரையில் 3.3 பில்லியன் ரூபா கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவிகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் நிறுவனத்திற்கு வழங்கப்படும் கடன் உதவிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமான மக்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்கில் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் மத்திய கிழக்கு நாடுகளில் 3 ஆயிரத்து 500 இலங்கைப் பெண்கள் நிர்க்கதியான நிலையில் காணப்படுவதால் அவர்களை மீள அழைப்பதற்கு இந்த விமான சேவையை பயன்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விமான போக்குவரத்து துறைசார் சட்ட மூலமொன்று தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினால் அமெரிக்கன் சிலோன் மிசன் தாய்ச்சங்கமாகிய பிற நாடுகளின் பணிக்கான அமெரிக்க ஆணைக்குழுவின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மானிப்பாய் அமெரிக்கன் மிசன் திருச்சபை தேவாலய மண்டபத்தில் கண்காட்சி நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-2-6)

# சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற ஆசனத்தை நீதிமன்றத்தினால் மட்டுமே பாதுகாக்க முடியும்

## சபா நாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனத்தை நீதிமன்றினால் மட்டுமே பாதுகாக்க முடியும் என சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவிற்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்ற தடையுத்தரவினை பிறப்பிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதனால் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசனம் குறித்த விவகாரத்தில் பாராளுமன்றில் விவாதிப்பது பொருத்தமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற ஆசனம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு வருவதனால் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற ஆசனம் வெற்றிடமாகியுள்ளதென அறிவிக்கவும் முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக் கெல் பெரேரா தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# சுற்றுலாவுக்கு ஏற்ற நாடுகளில் இலங்கை முதலிடம் பெற்றது

சுற்றுலாவுக்கு ஏற்ற நாடுகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 31 நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் சஞ்சிகை ஒன்று நடத்திய தெரிவு ஒன்றின் மூலம் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் யுத்த சூழ்நிலைநீங்கி அமைதியுடனான அரசியல் நிரந்தரத் தன்மை நிலவுவதே இதற்கான காரணம் என அந்த சஞ்சிகை தெரிவிக்கின்றது.

இதேவேளை நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இவ்வருடம் இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை என எதிர்பார்க்கப்பட்ட தொகை கடந்த ஓகஸ்ட் மாதத்திலேயே எதிர்பார்ப்பத்ததை விட அதிகரித்துள்ளதாக ஆசிய பசுபிக் சுற்றலா சங்கம் உறுதி செய்துள்ளது.

(ஸ்ரீ-2)

# றுகுணு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலில் 6 மாணவர்கள் காயம்

றுகுணு பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் 6 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 6 மாணவர்களும் நேற்று முன்தினம் இரவு மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர் சங்கத்தின் மாணவர்களுக்கும் விஞ்ஞான பீடத்தின் மாணவர்களுக்குமிடையில் இந்த மோதல் இடம் பெற்றுள்ளதாகவும் காயமடைந்த 6 மாணவர்களின் நிலைமையும் கவலைக்கிடமாக இல்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## 20 ஆம் ஆண்டின் நினைவலைகள்

அன்னை மடியில் — ஆண்டவன் அடியில்

1972 . 04 . 03 — 1990 . 10 . 21



**செல்வன் அன்றெய்சன் அருள்வளன்**

காலங்கள் உருண்டோடி – வாழ்வில்
எத்தனையோ மாற்றங்கள்
பாசமுடன் வளர்ந்த செல்வன்
பாதி வழியில் பயணம் முடித்து
பரமனடி சேர்ந்து
ஆண்டுகள் இருபது சென்றாலும்
மாண்டிடுமோ? எங்கள் துயர் – நாம்
அவனியில் வாழும்வரை

இவர் ஆன்மா ஆண்டவன் திருவடியில் நித்தியமாய் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்.
திரு. திருமதி சிங்கராயர்

(சி-1442)

# பிரித்தானிய கன்சவேட்டிவ் கட்சியினருடன் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடல்

பிரித்தானியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கன்சவேட்டிவ் கட்சித் தலைமையகத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு கன்சவேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அவர் இலங்கையின் சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி மற்றும் கன்சவேட்டிவ் கட்சிக்கும் இடையில் எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஒத்துழைப்பு செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் இளம் பிரமுகர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் சர்வதேச அரசியல் தொடர்பான பயிற்சி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு கன்சவேட்டிவ் கட்சியின் தலைவர்கள் இணங்கியுள்ளனர். இதேவேளை கட்சியின் பிரசார நடவடிக்கைகளுக்கு தொழினுட்ப ரீதியான பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது விஜயத்தின் போது பிரித்தானிய அரசாங்கத்தின் உயர் மட்ட ராஜதந்திரிகளையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்வார் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# உங்களுடைய கணனி தொடர்ந்து இயங்க...


கணனி நம் வாழ்வின் இணையாக, தோழனாக, இன்றியமையாத ஓர் அங்கமாக மாறிவிட்டது. நம் உடல் நலனைப் பாதுகாப்பது போல இதனையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது. அதற்கான சில குறிப்புக்கள் இங்கே தரப்படுகின்றன.

### ◆ அண்டி வைரஸ்

கணனி இயங்கும்போது எப்போதும் வைரஸ் தடுப்பு தொகுப்பு ஒன்று இயங்கிக் கொண்டே இருக்கவேண்டும். கட்டணம் செலுத்தியும், இலவசமாகவும் இந்தத் தடுப்பு தொகுப்புகளைப் பெறலாம்.

இவற்றை அவ்வப்போது அப்டேட் செய்து வைத்தல் மிக முக்கியமானது. அப்போதுதான், அன்றாடம் உருவாகும் வைரஸ்கள் மற்றும் கெடுக்கும், தகவல் திருடும் தொகுப்புக்களிலிருந்து நம் கணனியைப் பாதுகாக்கலாம். இலவச தடுப்புத் திட்டங்கள் பல கிடைத்தாலும், கீழ்க் கண்டவை நிலையான நல்ல பயன் பாட்டைத் தருவது உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

**1.ஏவிஜி அண்டி வைரஸ் (AVG Antivirus):**
http://www.avg.com/inen/




liteproductavgantivirusfree

**2.அவிரா பேர்சனல் பிரீ அண்ட்டி வைரஸ் (Avira Personal Anti Virus)**

அவாஸ்ட் ஹோம் எடிஷன் பிரிஅண்டி வைரஸ் (Avast Home Edition Free Antivirus) : http//www.avast.com/eng/avast 4 home.html)

### ◆ பயர்வால்

அண்டி வைரஸ் தொகுப்புக்களுடன், திருட்டுத்தனமாக நம் கணனிகளுக்குள் நுழையவரும் புரோகிராம்களைத் தடுக்கும் பயர்வோல் அமைப்பினை நம் கணனிகளில் அமைக்கவேண்டும்.அண்டிவைரஸ் தொகுப்புக்களைப் போலவே, இணையத்தில் இலவச பயர்வோல் தொகுப்புக்களும் கிடைக்கின்றன. அவற்றில் சில,

**1.ஸோன் அலார்ம் பிரீ பயர்வோல்(Zone Alarm Free Firewall):**
http://www.zonealarm.com

**2.பிசி ரூல்ஸ் பயர்வோல் ப்ளஸ் (PC Tools Firewall Plus)**
http://www.pctools.com/firewall/

கொமொடோ இன்டர்நெட் செக்யூரிட்டி (Comodo Internet Security)
http://personalfirewall.comodo.com/

### ◆ நாள்பட்ட பைல் நீக்கம்

பாதுகாப்பு தொகுப்புக்களை நிறுவிய பின், நாம் எப்படி நம் கணனிக்குக் கெடுதல் விளைவிக்கிறோம் என்பதனை எண்ணிப் பார்த்து,அவற்றை நீக்குதல் நலம் தரும்.

வெகுநாட்களாகப் பயன்படுத்தாத கோப்புகள், ஒரே பெயரில், பல ட்ரைவ்களில் சேமிக்கப்படும் வீடியோ, ஓடியோ மற்றும்சில ஆவணக் கோப்புகள், திருத்தி அமைத்த பின்னும், அதன் பழைய ஆவணக் கோப்புகள், இணையத்தில் செல்கையில் இறக்கப்படும் தற்காலிகக்கோப்புகள் எனப்பல கோபபுகளை நாம ஹாட டிஸககல வைதது, கணனியின் இயக்க வேகத்தை மட்டுப் படுத்துகிறோம்.

இதேபோல் அழிக்கப்படும் பைல்கள் எப்போதும் ரீசைக்கிள் பின் நிறைந்து வழியும் வகையில் நிரப்புகிறோம். ஒரே சொப்ட் வெயர் அப்ளிகேஷன் சார்ந்த பழைய பதிப்புக்களின் மூலக் கோப்புகளைத் தேவையில்லாமல் வைத்திருக்கிறோம். வாரம் அல்லது மாதம் ஒருமுறை இவற்றை நீக்கினால், கணனி நலமாக, அதிகப் பயன்தரும் வகையில் இயங்கும்.

### ◆ ரெஜிஸ்ட்ரி சுத்தம் செய்திடுக

தேவைப்படாத சொப்ட்வெயர் அப்ளிகேஷன்களை நீக்கினாலும் ,இவை ரெஜிஸ்ட்ரியில் ஏற்படுத்திய பல நூறு வரிகள், அப்படியே தங்கி,நம் இயக்க வேகத்தினைக் குறைக்கும்.நாமாக இவற்றை நீக்கமுயன்றால், ரெஜிஸ்டிக்குப் பாதிப்பு ஏற்பட்டு, இயக்க வேகம் குறையும்.

இவற்றை நீக்க இணையத்தில் இலவச ரெஜிஸ்டரி கிளீனர்கள் கிடைக்கின்றன. இவற்றில் சில கிடைக்கும் முகவரிகளை இங்கு காணலாம்.

1.ரெஜிஸ்ட்ரி மெக்கானிக் (Registry Mechanic):http://www.pctools.com/registrymechanic

2.ரெஜிஸ்ட்ரி ஈசி (Registry Easy) : http://www.regeasy cleaner.com

3.ரெஜிஸ்ட்ரி பிக்ஸ் (Registry Fix): http://www.registryfix.com

### ◆ ஸ்பைவெயர் தொகுப்பு இயக்குதல்

அண்டிவைரஸ் தொகுப்பு மற்றும் பயர்வோல் தொகுப்புகளைப் போல, நம் கணனியில் நாம் அறியாமல் வந்திறங்கும், நம் பேர்சனல் தகவல்களைத் திருடும் ஸ்பையவெயர் புரோகிராம்களைக் கண்டறிந்து நீக்கும் தொகுப்புகளையும் நாம் பதிந்து இயக்கவேண்டும்.

ஸ்பைவெயர், மால்வெயர்;அட்வெயர் எனப் பல பெயர்களில் இவை அழைக்கப் படுகின்றன. இந்த வகை புரோகிராம்களும் கணனி இயக்கத்தினை மட்டுப்படுத்தும். தகவல்களைத் திருடும் பட்சத்தில் பெரிய அளவில் இழப்பையும் ஏற்படுத்தும்.

(தொடரும்)

# சிக்க வைக்கும் தூண்டில்கள்

(சென்றவாரத்தொடர்ச்சி)

**◆பி.டி.எப் முகமூடியுடன் வைரஸ்:** கடந்த சில ஆண்டுகளாகவே, மைக்ரோ சொப்ட் நிறுவனம், விண்டோஸ் இயக்கத்திற்கான பாதுகாப்பு பைல்களை மிக சிரத்தையுடன் வழங்கி வருகிறது. இதனால், வைரஸ்களைப் பரப்புபவர்கள், புதிய வழிகளைக் கையாள்கின்றனர்.அடோப் ரீடர் போன்ற சொப்ட்வெயர் தொகுப்புகளில் உள்ள பாதுகாப்பற்ற வழிகளைக் கண்டறிந்து, தங்கள் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்கின்றனர். இதனால், பி.டி.எப். பைல்களின் போர்வையில்,மோசமான வைரஸ்கள் பரப்பிவிடப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டில் பரவிய இத்தகைய பைல்களில் 49% பைல்கள் பி.டி.எப். போர்வையில் வந்தன. இதிலிருந்து தப்பிக்க அடோப் ரீடர் தொகுப்பின் அப்டேட்டட் பதிப்பைப் பயன்படுத்தவும் அல்லது பி.டி.எப். பைல்களைப் படிக்கும் வேறு சொப்ட் வெயர் தொகுப்புகளைப் பயன்படுத்தவும்.

### ◆வீடியோ பிளேயர் வழியாக

குயிக் டைம் போன்ற பிழைகள் கொண்ட வீடியோ பிளேயர் தொகுப்புகள் வழியாக மால்வேர் புரோகிராம்கள் பரவுவது இப்போது பரவி வருகிறது. வீடியோ இயக்கப்படுகையில் இந்த மால்வேர் புரோகிராம்கள் கணனியை அடைந்து பின் அதிலிருந்து மற்றவற்றிற்குப் பரவுகின்றன. அந்த கணனியையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்றன. இதிலிருந்து தப்பிக்க வீடியோ பிளேயர் புரோகிராம்களை அவ்வப்போது அப்டேட் செய்திடவும்.

### ◆ தானாக பதியப்படும் சொப்ட்வெயர்கள்

பொதுவாக நமக்கு வேண்டிய புரோகிராம்களை டவுண்லோட் செய்து பின் நாம் விரும்பும் நேரத்தில் அவற்றை இன்ஸ்டோல் செய்திடுவோம். ஆனால் சில இணைய தளங்களில் நம்மைக் கவரும் வகையில் சில புரோகிராம்கள் குறித்து தகவல் தரப்படும். அதன் பால் ஈர்க்கப்பட்டு நாம் கிளிக் செய்தால் அவை தானாகவே நம் கணனியில் நேரடியாக இன்ஸ்டோல் செய்யப்படும். இவற்றை driveby download புரோகிராம்கள் என அழைக்கின்றனர்.

இத்தகைய புரோகிராம்கள் பெரும்பாலும் மால்வேர் புரோகிராம்களாகவே இருக்கின்றன. இதிலிருந்து தப்பிக்க நம் பாதுகாப்பு புரோகிராம்களை எப்போதும் அப்டேட்ட் நிலையிலேயே வைத்திருக்க வேண்டும்.

### ◆ போலியான ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்கள்

சில ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்கள் நமக்கு சில இலவச சேவைகள் செய்வதாகக் கூறி பின் பயமுறுத்தி நம்மிடமிருந்து பணத்தைப் பெறும் வழிகளில் இறங்கும். நம் வங்கி கணக்கினை எல்லாம் கேட்கும். இத்தகைய புரோகிராம்கள் extortionware என அழைக்கப்படுகின்றன.

குழந்தைகளை கடத்திச் சென்று பணம் பறிப்பது போலத்தான் இதுவும். இதிலிருந்து தப்பிக்க உங்களைப் பயமுறுத்தி வரும் செய்திகளை அலட்சியப்படுத்தி விடுங்கள்

### ◆நிறுவனங்கள் பெயரில் விளம்பரங்கள்

பெரிய நிறுவனங்களுக்கு உங்களை இட்டுச் செல்வதற்கான லிங்குகளைக் காட்டி, அதில் கிளிக் செய்திட உங்களுக்கு அழைப்பு விடுக்கும் விளம்பரங்கள் காட்டப் பட்டால், அதன் வழியே செல்லவேண்டாம். இவை எப்போதும் தீங்கு விளைவிப்பதாகவே இருக்கும்.

மேலே குறிப்பிட்ட வழிகள் தவிர, இன்னும் நிறைய வழிகளில் நம்மைச் சிக்கவைத்திடும் இடங்கள் இணையத்தில் இருக்கின்றன. நம் பணிகளை மட்டுமே கவனித்து, இயங்கினால் நமக்கு வரும் இடையூறுகளில் பலவற்றைத் தவிர்க்கலாம்.




# கணனி சாவியாக யு.எஸ்.பி. ஸ்டிக்

(கடந்த 7ஆம் திகதி தொடர்ச்சி)

பின் இதனை விரித்து உங்கள் சி.ட்ரைவில் இதனைப் பதிந்து கொள்ளுங்கள். யு.எஸ்.பி. ட்ரைவில் இதனைப் பதிய வேண்டாம். இப்போது பிரிடேட்டர் பைலை இயக்குங்கள். உங்கள் யு.எஸ்.பி. போர்ட்டில் யு.எஸ். பி. ஸ்டிக்கினை இன்ஸேர்ட் செய்திடும்படி உங்களைக் கணனி கேட்டுக் கொள்ளும். பின் இதற்கான பாஸ்வேர்ட் ஒன்றை நீங்கள் அமைக்க வேண்டும். அவ்வளவு தான்.

இனி விண்டோஸ் ஸ்டார்ட் செய்கையில் இந்த யு.எஸ்.பி. ஸ்டிக்கை அதன் போர்ட்டில் செருகி வைக்கவும். விண்டோஸ் ஸ்டார்ட் ஆகும் போது பிரிடேட்டரை இயக்கவும். பின் எப்போதெல்லாம். எடுத்தவுடன் கீ போர்ட் மற்றும் மவுஸ் லொக் செய்யப்பட்டு திரை கறுப்பாக மாறிவிடும். மீண்டும் இதனை அதன் இடத்தில் செருகிப் பயன்படுத்தினால் மட்டுமே கணனி இயங்கும்.

கணனியை லொக் ஓப் செய்து செல்லலாமே என நாம் நினைக்கலாம். விண்டோஸ் கீ+ எல் கீயை அழுத்தினால் லொக் செய்திடலாமே என்ற எண்ணம் ஓடலாம். இதனையும் பயன்படுத்தலாம்.

இங்கு நீங்கள் மீண்டும் இயக்க பாஸ்வேர்டினை டைப் செய்திட வேண்டும். இந்த பாஸ்வேர்ட் மற்றவர்களுக்குத் தெரிந்து விட்டால் தொல்லைதான். ஆனால் பிரிடேட்டர் ஒரு சாவி போலவே செயல்படுகிறது. யு.எஸ்.பி. ஸ்டிக்கினை கணனி வீட்டின் சாவி போலப் பயன்படுத்தலாம்.

# ஆங்கிலத்தில் எழுத கூகுள் உதவி

வாரம் தோறும் ஏதேனும் ஆரவாரமாகச் செய்து, இணையத்தின் மூலம் அனைவரையும் வளைத்துப் போடும் முயற்சிகளில் கூகுள் ஈடுபட்டு வருவதனை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அந்த வகையில் கூகுள் லேப்ஸ் மையத்திலிருந்து இன்னொரு வசதி நமக்குக் கிடைத்துள்ளது.ஆங்கிலத்தில் கடிதம், கட்டுரை என எந்த டெக்ஸ்ட் அமைக்க வேண்டும் என்றாலும், அதற்கான சொற்களை எடுத்துக் கொடுத்து உதவுகிறது.

## இவ்வார இணையத்தளம்

இந்த வசதி தரும் சொப்ட்வெயர் சாதனத்திற்கு Google Scribe என்று பெயர் கொடுத்துள்ளது. இந்த வசதி கிடைக்கும் தளத்தின் பெயர் http://scribe.google labs.com.

இந்த வசதியைப் பெற நாம் முதலில் இணைய இணைப்பில் இந்தத் தளத்திற்குச் செல்லவேணடும்.இதில் நாம் டைப் செய்யத் தொடங்கியவுடனேயே இந்த சொல் இதுவாக இருக்கவேண்டும் எனப் பல சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. நாம் தொடர்ந்து டைப் செய்திடலாம். அல்லது நாம் டைப் செய்திட விரும்பும் சொல்இருப்பின், கேர்சரை நகர்த்தாமல், அதன் எதிரே இருக்கும் எண்ணுக்கான கீயை அழுத்தினால் போதும்.


அந்த சொல் அமைக்கப்படுகிறது.

அடுத்து, அடுத்த சொல் டைப் செய்திடுகையில், நீங்கள் அமைக்க இருக்கும் வாக்கியம் என்னவாக இருக்கும் என்று உணர்ந்து,மீண்டும் அடுத்த சொற்களைத் தருகிறது.இதனால், நமக்குக் எழுத்துப் பிழை இல்லாமல் சொற்கள் கிடைக்கின்றன.அடுத்து ஆங்கிலத்தில் நல்ல சரியான சொற்கள் நம் எண்ணத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கும் வகையில் தரப்படுகின்றன. இதில் அனைத்துப் பிரிவுகளுக்கும் சொற்கள் கிடைக்கின்றன.

அறிவியல் துறையில் நீங்கள் எழுத வேண்டும் என முயற்சித்தாலும், உங்களுடைய பொருளை உணர்ந்து கொண்டு, அதற்கேற்ற சொற்கள் பட்டியலிடப்படுகின்றன. இது ஆங்கிலத்தில் எழுத விரும்பும் அனைவருக்கும் ஒரு பயனுள்ள தளமாகும்.

# உருத்திரகுமாரன், நெடியவனின் சர்வதேச நடவடிக்கைகள் முறியடிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழத்தின்மூலம் மீண்டும் நாட்டில் புலிப் பயங்கரவாதத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கும் உருத்திரகுமாரன் மற்றும் நெடியவன் ஆகியோரின் நடவடிக்கைகளை முறியடிக்க சர்வதேச பொலிஸார் மற்றும்விசேட புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதமர் டி.எம். ஜயரத்ன நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எல்.ரீ.ரீ.ஈ யின் சர்வதேச வலைப்பின்னலையும் அதன் செயற்பாட்டையும் முழு அளவில் முடக்குவதே இன்று அரசாங்கம் எதிர்நோக்கும் சவாலாகும்.

புலிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்ட பின்னர் வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் இலங்கை வருபவர்களையும் இறுதி மோதல் நடந்த பின்னர் வடக்கிலிருந்து தெற்குப் பிரதேசத்துக்கு வந்து பின்னர் மீண்டும் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்குச் செல்பவர்களையும் கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார். (ஸ்ரீ-2)

# வாகன விபத்தில் ஐவர் படுகாயம்

(கொழும்பு)

தேங்காய் லொறியொன்றும் பயணிகள் வானும் மோதிக்கொண்டதில் வான் சாரதி உள்ளிட்ட ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வவுனியா அரசினர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 5.45 மணியளவில் வவுனியா -கண்டி வீதியில் கலகந்தம என்னும் இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு பயணிகளுடன் சென்ற வானும் தேங்காய் ஏற்றிக்கொண்டு வவுனியா வந்துகொண்டிருந்த லொறியுமே மோதிக்கொண்டது என போக்குவரத்து பொலிஸாரின் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-2)

# அரசாங்கம் அடக்குமுறை ஆட்சியையே வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கின்றது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் மற்றும் இராணுவத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் ஒரு அடக்குமுறையிலான ஆட்சியையே வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கின்றது.

இன்னும் அடிப்படை வசதிகள் கூட கிடைக்காத எத்தனையோ இடம் பெயர்ந்த மக்கள் வன்னியில் வாழ்கின்றார்கள் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமையலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறுகையில்,

இலங்கையில் யுத்தம் முடிந்து தற்போது ஒரு வருடமும் ஆறு மாதங்களும்கடந்துவிட்டன. ஆனால் இதுவரையில் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தோம்.

ஆனால் இதுவரையில் அதுவும் நடைபெறவில்லை. இப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்கூட போதியளவு இல்லை.

அரசாங்கம் தமது அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி அடக்குமுறையிலான ஆட்சியை முன்னெடுத்து மீண்டும் வடக்கு - கிழக்குமக்களை அச்சத்துக்குள் சிறை வைத்துள்ளது. உண்மைகளை வெளியிடும் நபர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து தகவல்களை மூடி மறைத்துள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய புலி உறுப்பினர்களை போன்றே கே.பி.க்கும் மறுவாழ்வு அளிக்கப்படுகிறது

## பிரதமர் தெரிவிப்பு

ஏனைய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களைப் போன்றே குமரன் பத்மநாதனுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் டி.எம்.ஜெயரட்ன தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குமரன் பத்மநாதனிடம் விடுதலைப்புலி இயக்கம் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போர்க் காலத்தில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் எந்த வழியிலேனும் புலிகள் மீள இயங்குவதனை தடுத்து நிறுத்த அவசரகாலச் சட்டம் மிகவும் அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஜப்பானியப் பெண்ணிடம் 24 கோடி ரூபா நிதி மோசடி செய்த தம்பதியினர் கைது

(கொழும்பு)

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் விடுதி ஒன்றை அமைப்பதாகத் தெரிவித்து ஜப்பானிய பெண் ஒருவரிடம் 24 கோடி ரூபா நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரகசியப் பொலிஸார் குறித்த தம்பதியினரை அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

விடுதி அமைப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி சொகுசு வீடுகளையும் வாகனங்களையும் இந்த தம்பதியினர் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஜப்பானியப் பெண் அபுதாபியில் பாரிய வர்த்தக நிலையமொன்றை நடத்தி வருவதாகவும் அந்த நிறுவனத்தில் பணியாற்றி வந்த இலங்கையர்களே இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதி அமைப்பதற்காக பணம் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் எவ்வித தொடர்புகளும் இல்லாத காரணத்தினால் குறித்த ஜப்பானியப் பெண்மணி இலங்கைக்குச் சென்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபரை பொலிஸார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




- 1520 - பேர்டினண்ட் மகலன் சிலியில் புதிய நீரிணை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகலன் நீரிணை எனப் பெயர் பெற்றது.
- 1805 - டிரபல்கார் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள், பிரெஞ்சு மற்றும் ஸ்பானியக் கூட்டுப் படைகளின் கடற்படையை வென்றன. இவ் வெற்றி பிரித்தானியக் கடற்படையை 20ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந்தியத்தின் பெரும் கடற்படை வல்லரசாக ஆக்கியது.
- 1805 - ஊல்ம் என்ற இடத்தில் ஆஸ்திரியா நெப்போலியனின் பெரும் இராணுவத்திடம் சரணடைந்தது. நெப்போலியன் 30ஆயிரம் பேரைச் சிறைப்பிடித்தான்.
- 1824 - ஜோசப் ஆஸ்ப்டின் போர்ட்லண்ட் சிமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1837 - அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஒசியோலா கைது செய்யப்பட்டான்.
- 1854 - புளோரன்ஸ் நைட்டிங்கேல் மற்றும் 38 தாதிகள் கிரிமியன் போர் முனைக்கு அனுப்பப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்பினரிடம் வேர்ஜீனியாவில் தோற்றனர். ஆபிரகாம் லிங்கனின் நெருங்கிய நண்பர் "எட்வேர்ட் பேக்கர்" கொல்லப்பட்டார்.
- 1876 - யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவியது.
- 1879 - தோமஸ் எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது.
- 1892 - உலக கொலம்பியக் கண்காட்சி சிக்காகோவில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. ஆனாலும், கட்டிட வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் இக்கண்காட்சி 1893, மே மாதம் 1 ஆம் திகதி பொதுமக்களின் பார்வைக்குத் திறக்கப்பட்டது.
- 1895 - ஜப்பானியப் படைகளின் முற்றுகையினால் போர்மோசா குடியரசு வீழ்ந்தது.
- 1944 - கிறகுஜேவாச் படுகொலைகள்: நாசி ஜெர்மனியப் படைகள் 7ஆயிரம் சேர்பியரை படுகொலைச் செய்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: முதலாவது கமிகசே ஜப்பானிய விமானத் தற்கொலைத் தாக்குதல், அவுஸ்திரேலிய கப்பல் மீது நடத்தப்பட்டது.
- 1945 - பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1966 - வேல்சில் அபெர்ஃபான் என்னும் கிராமத்தில் நிலக்கரி கழிவுகள் அடங்கிய பாறை வீழ்ந்ததில் 116 பாடசாலைச் சிறுவர்கள் உட்பட 144 பேர் கொல்லப்பட்டனர்.
- 1969 - சோமாலியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.
- 1983 - நிறைகளுக்கும் அளவைகளுக்குமான 17ஆவது அனைத்துலகக் கருத்தரங்கில், முழுமையான வெற்றிடத்தில், துல்லியமாக 1/299, 792, 458 வினாடி நேரத்தில் ஒளி செல்லும் பாதையின் நீளமாக ஒரு மீட்டர் வரையறுக்கப்பட்டது.
- 1994 -சியோல் நகரில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - குறுங்கோள் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.


### பிறப்புகள்

- 1833 - அல்பிரட் நோபல், சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர்,நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ. 1896)
- 1925 - சுர்ஜித் சிங் பர்னாலா, இந்திய அரசியல்வாதி

### இறப்புகள்

- 1835 - முத்துசுவாமி தீட்சிதர், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி. 1776)

**1987 - யாழ்ப்பாணம் மருத்துவமனையில் இந்திய இராணுவத்தி னர் சுட்டதில் மருத்து வர்கள்,ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.**



# 10 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

10-ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் தைரியமும் பயமும் கலந்த மன நிலையிலேயே இருப்பதைக் காணலாம். இதற்கு இவர்களின் பிறந்த திகதி எண்ணான 1-ன் ஆதிக்கமே காரணமாகும். இவர்களுக்கு தொழில் அதிபதி எண் 9; தொழில் உதவி எண் 5, 9-ஆம் எண்ணின் ஆதிக்கப்படியே இவர்களின் தொழில் அமையும்.

இவர்களில் பெரும்பான்மையோர் இரண்டாம் இடத்தில் இருப்பதைக் காணலாம். திடீரென்று தைரியமாகச் செயல்படக் கூடியவர்கள். பெரும்பாலான சமயங்களில் அவநம்பிக்கையுடன் இருப்பதையும் காணலாம். எந்த முடிவையும் தாமதமாக எடுக்கும் நிலை இருப்பதையும் காணலாம். சற்றும் யோசிக்காமல் செய்யும் சில செயல்களால் துன்பமும் மனக் குழப்பமும் அடைவார்கள்.

இவர்களில் பலருக்கு தொழில் எண் 9இன் ஆதிக்கம் சரியாக அமையாததே இதற்குக் காரணம். தொழில் உதவி எண்ணான 5-ஆம் எண் 1-ஆம் எண்ணின் ஆதிக்கத்தைத் தடுத்து தனது ஆதிக்கத்தை நடைமுறைப்படுத்துவதால்தான் திடீர் பலமும் பலவீனமும் உண்டாகிறது.

பிறந்த திகதி எண் 1இன் ஆதிக்கமும் தொழில் எண் 9இன் ஆதிக்கமும் உதவி எண் 5இன் ஆதிக்கமும் ஒருசேரப் பெற்றுவிட்டால் இவர்கள் மிக உயர்ந்த பதவிகளிலும், நியாயம் கூறும் இடங்களிலும் பணி செய்யும் நிலை உண்டாகும். எதற்கும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தன் செயல் ஒன்றே சரி என்று சொல்லும் நிலையை அடைவார்கள்.

இவர்களில் பெரும்பாலோர் தொழில் உதவி எண் 5இன் ஆதிக் கத்தால் சுய சிந்தனையால் முன்னேறி மிகச் சிறப்பான பதவியைப் பெறக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றாலும், பிறந்த திகதி எண்ணின் ஆதிக்கக் குறைவால் காலதாமதம் ஏற்பட்டு மன உளைச்சல் அடையக் கூடும். எண் ஆதிக்கம் பெற்று வளமான வாழ்வைப் பெற ஞாயிறு தோறும் சூரியன் மற்றும் விநாயகரை வழிபட்டு வரவேண்டும்.

இவர்கள் பெரும்பாலும் சிறந்த தொழிலாளர்களைப் பெற்றவர்களாகவே இருப்பார்கள்.

தொழில் எண் 9 மற்றும் தொழில் உதவி எண் 5இன் ஆதிக்கத்தால் அதிகமாக நன்மைகளே கிடைக்கப் பெறுவார்கள். இவர்களின் மனதில் எதிர் பார்ப்பும் ஏக்கமும் அதிகம் காணப்படும். தேவையற்ற பல கேள்விகளைக் கேட்டு மற்றவர்களைச் சங்கடப்படுத்தவும் செய்வார்கள்.

நினைத்ததை உடனே செய்துவிட வேண்டும் என்ற எண்ணமும் அதிகமாகக் காணப்படும். காலதாமதத்தை விரும்பாதவர்களாதலால் சமயத்தில் பிறரால் வஞ்சிக்கப்படுவார்கள். தொழில் எண் 9இன் ஆதிக்கம் அதிகமாக இருந்தால் மிக அதிக புத்திக் கூர்மையும் சுறுசுறுப்பும் காணப்படும். தொழில் எண் 5இன் ஆதிக்கத்தால் ஓய்வின்றி உழைக்கும் குணம் கிடைக்கப் பெறுவதால் வெற்றிகளை சர்வ சாதாரணமாகவே அடைந்து விடுவார்கள்.

எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் இருப்பதைக் காப்பற்றிக் கொள்ளவே முற்படுவார்கள். எப்போதும் ஒருவித பயம் மனதில் குடிகொண்டு விடும். இதை வைத்தே இவர்களின் நிலையை மற்றவர்கள் அறிந்து விலகிச் செல்வார்கள்.

நன்மை செய்யும் எண்ணிற்கு நட்பு எண்களில் 3இஆம் எண்ணின் ஆதிக்கம் மட்டுமே இவர்களுக்கு உதவி செய்வதால், எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் கடன் மற்றும் குடும்பப் பிரச்சினைகளால் சரிவைக் காண்பார்கள். மனநிலை குழப்பம் மிகுந்ததாகவே இருக்கும். இவர்கள் எண் ஆதிக்கம் பெறவும் தொழில் சிறக்கவும் புதன்கிழமை தோறும் சக்கரத்தாழ்வாரை வழிபட்டு வர வேண்டும்.

இவர்கள் எப்போதும் பெரும்பான்மையான நன்மையும் சற்று குறைவான தீமையும் பெறக் கூடியவர்களாவார்கள். இவர்களுக்கு தொழிலில் நிம்மதி என்றால் குடும்பத்தில பிரச்சினையும்-குடும்பத்தில் நிம்மதி என்றால் தொழிலில் பிரச்சினையும் மாறி மாறி அமைகிறது. விட்டுக் கொடுக்கும் குணம் இவர்களிடம் மிகவும் குறைவாகக் காணப்படும்.

தொழில் எண் 9இன் ஆதிக்கம் மட்டும் இருப்பதால்தான் இந்த நிலையைப் பெற்றுள்ளார்கள். தொழில் உதவி எண் 5இன் ஆதிக்கம் மற்றும் பிறந்த திகதி எண் 1இன் ஆதிக்கம் பெற்றவர்கள். அதைச் சரியாகப் பயன்படுத்தி முன்னேறி புதிய தொழில் செய்யும் நிலையை அடைவார்கள்.

மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் தன் நிலையை மட்டுமே சிந்தித்துச் செயல்பட்டு முன்னேறும் நிலை உடையவர்கள். பிறந்த திகதி எண், தொழில் எண், தொழில் உதவி எண் இவற்றில் ஏதேனும் இரண்டு எண்களின் ஆதிக்கம் கிடைக்கப் பெற்றுவிட்டால் திடீரென முன்னேற்றம் ஏற்பட்டு சுய தொழில் செய்யும் நிலை உண்டாகும்.

உதவி செய்தவர்களையும் இறைவழிபாட்டையும் மறந்து தன் அறிவால்தான் முன்னேற்றம் கிடைத்தது என்றும் கூறுவார்கள். இவர்கள் ஞாயிறு தோறும் துர்க்காதேவியை வழிபாடு செய்து வந்தால் சிறந்த தொழிலையும் மன அமைதியையும் பெறலாம்.

இவர்களின் வாழ்வில் ஒரு பகுதி சங்கடங்கள் இருந்தாலும், தொழில் ரீதியாக மன அமைதி, புகழ், அந்தஸ்து ஆகியவை பெற்று பெருவாழ்வு வாழும் நிலை உண்டாகும். தொழில் எண் 9 மற்றும் உதவி செய்யும் எண் 5இன் ஆதிக்கத்தால் சரியாகத் திட்டமிட்டுச் செயல்பட்டு, வாழ்வின் பெரும் பகுதி நல் வாழ்வு பெறும் நிலை உண்டாகும். 9 மற்றும் 5ஆம் எண்களின் ஆதிக்கம் குறைந்திருந்தால் தொழில் சிறப்பாக இருந்தும் மண வாழ்க்கை சரிவர அமையாமல் போகும்.

வயது கூடக்கூட இவர்களின் பிறந்த திகதி எண்களின் ஆதிக்கம் ஏற்றத்தாழ்வான நிலையில் செயல்படுவதால்தான் குடும்ப நிலை குழப்பமாக இருக்கிறது. மேலும் தன்நிலை மறந்து இருக்கும்படியும் மனக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இவர்கள் ஞாயிறுதோறும் கலை வாணியை வணங்கி வந்தால் அனைத்தும் நலமாக அமையப்பெறும்.

பிறந்த திகதி எண் 1, விதி எண் 1 ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் குறைந்த பட்சம் 19 வருடங்களும் அதிகபட்சமாக 23 வருடங்களும் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 2 ஆக இருப்பவர்களுக்கு இடைவெளி விட்டு 4 அல்லது 6 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 3 ஆக உள்ளவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்கள் கிடைக்கும்.

பிறந்த திகதி 1, விதி எண் 4ஆக இருப்பவர்களுக்கு மிக அதிக பட்சமாக 37 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த

**எஸ்.என்.ஹிரிஜ**

திகதி 1, விதி எண் 5ஆக இருப்பவர்களுக்கு 28 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும்.

பிறந்த திகதி 1, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு 37 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும்.

பிறந்த திகதி 1, விதி எண் 8-ஆக இருப்பவர்களுக்கு 10 முதல் 19 வருடங்கள் சிறப்பான பலன் களைச் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 9-ஆக இருப்பவர்களுக்கு 19 முதல் 27 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும்.

*குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.* (தொடரும்)

## மல்லாவி வீதியில் கண்ணிவெடி போக்குவரத்துக்கள் நிறுத்தம்

(கொழும்பு)

வன்னியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மாங்குளம் சந்தியில் இருந்து செல்லும் மல்லாவி வீதியில் வெடிக்காத நிலையில் கண்டெடுக்கப்பட்ட கண்ணிவெடியினால் ஏ-9 நெடுஞ்சாலை ஊடான போக்குவரத்துக்கள் சில மணி நேரம் நிறுத்தப்பட்டதாக வன்னி தகவல்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம் 8.30 மணிவரையிலும் போக்குவரத் துக்கள் நிறுத்தப்பட்டதுடன் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்ட பின்னரே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டன.

இதனால் வவுனியாவில் சில மணி நேரம் பதற்றம் ஏற்பட்டதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வவுனியாவில் உள்ள யோசெப் முகாமுக்கு பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கைதடிப் பிரதேச பாடசாலை மாணவர் களுக்கிடையில் கட்டுரைப் போட்டி நடத்தவுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் இரு மாணவர்கள் மட்டுமே பங்கு பற்ற முடியும்.

இதற்கமைய பிரிவு I இல் தரம் 4,5 ஐச் சேர் ந்த மாணவர்களும் பிரிவு II இல் தரம் 6, 7 ,8 ஐச் சேர்ந்த மாணவர்களும் பிரிவு III இல் தரம் 9, 10, 11 ஐச் சேர்ந்த மாணவர்களும் பிரிவு IV இல் தரம் 12, 13 ஐச் சேர்ந்த மாணவர்களும் பங்கு பற்றலாம்.

போட்டியின் போது வழங்கப்படும் குறித்த ஓர் தலைப்புப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுத வேண்டும். பிரிவு I இற்கு நூல் நிலையம் , நான் விரும்பும் நூல் , இல் புத்தகத்தின் சுயசரிதை எனும் தலைப்புகளில் ஏதாவதொன்றை 100 சொற்களுக்கு குறையாமலும் பிரிவு II இற்கு எமது சிறிய நாடு , எமது கிராமத்திற்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நாள், புத்தகம் பேசுகிறது எனும் தலைப்புக்களில் ஏதாவதொன்றை 200 சொற்களுக்கு குறையா மலும் பிரிவு III இல் இற்கு மனிதனும் சூழலும் , நாட்டின் உயிர் நாடி கலாசாரமாகும், டெங்குப் பிரச்சினைகளைத் தவிர்ப்போம் எனும் தலைப்புக்களில் ஏதாவதொன்றை 250 சொற்களுக்கு குறையாமலும் பிரிவு IV இற்கு எம்மை விட்டு நீங்கும் பண்பாடு , தொலைக் காட்சியினால் உருவாகும் இன்றைய சீர்கேடுகள் , அதிசய பாதைக்கு வாசிப்பினால் ஒன்று சேர்வோம் எனும் தலைப்புக்களில் ஏதாவதொன்றை 300 சொற்களுக்கு குறையாமலும் எழுதுதல் வேண்டும்.

மேற்படி போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என கைதடி நூலகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சட்டவிரோதமாக வெளிநாடு சென்று நாடு திரும்பியவர் பிணையில் விடுதலை

சட்டவிரோதமான முறையில் நாட்டைவிட்டு வெளியேறிய குற்றச்சாட்டால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபரை நீர்கொழும்பு பிரதான நீதிவான் 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் மூன்று இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவராவார்.

சந்தேக நபர் 2005 ஆம் ஆண்டு படகொன்றில் மூலமாக இந்தியாவுக்கு தப்பிச் சென்று பின்னர் இத்தாலிக்கு சென்றுள்ளார்.

இவ்வாண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பி வந்த போது இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போதே பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

## காத்தவராயன் சிந்துநடைக் கூத்து

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கட்டுவன்புலம் மகாவித்தியாலத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சியாக நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் காத்த வராயன் சிந்துநடைக்கூத்து நாளைவெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு பாடசாலை அதிபர் க.பத்மநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

மேற்குறித்த நிகழ்வானது பாடசாலையின் அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-53)

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பிரித்தானிய பாராளுமன்றில் விவாதிக்கப்படும்

## த.தே.கூட்டமைப்பிடம் பிரி.நாடாளுமன்ற குழுவினர் உறுதி

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்மைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நர்டாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் பிரிட்டன் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது இடம்பெயர் மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு தேவையான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் தொடர்பில் அரசாங்கம் சிரத்தை எடுத்துக் கொள்வதாக பிரசாரம் செய்யப்பட்ட போதிலும் பிரதேச மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கும் பௌத்த சின்னங்களை உருவாக்குவதற்கும் இராணுவ குடியிருப்புக்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் போது மக்கள் கொல்லப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் வடக்கு-கிழக்கில் 9ஆயிரம் பெண்கள் விதவையாகியுள்ளதாகப் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர். மக்கள் உயிரிழக்கவில்லையென்றால் எவ்வாறு இவ்வளவு பேர் கணவனை இழந்த பெண்களாக உள்ளார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சி கேள்வி யெழுப்பியுள்ளது. அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாக கட்சி முறைப்பாடு செய்துள்ளது.

வெளிநாடுகளில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசப்பட்ட போதிலும் இலங்கையில் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளனர். அத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தம்மை இணைத்துக்கொள்ளாமல் அரசாங்கம் செயற்படு வது தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றக்குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பான தகவல்கள் தமக்கு கிடைக்கப்பெற்றதாகவும் பிரச்சினைகள் குறித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றில் விவாதிக்கப்படும் எனவும் பிரிட்டன் பிரதி நிதிகள் குறிப்பிட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# நாட்டின் தற்போதைய தேவை தலைமைத்துவ மாற்றமே

## மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டுக்குத் தற்போது தேவை நாட்டின் தலைமைத்துவத்தில் மறுசீரமைப்பு எனவும் இவ்வாறான நிலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குறித்து மாத்திரம் பேசுவ தானது அரசாங்கத்திற்கு மறைமுகமாக உதவுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது அரசாங்கத்தின் ஏகாதிபத்திய வெறி தொடர்பான மக்களின் கவனத்தை திசைத் திருப்பும் எனவும் கட்சிக்குள் எவ்வாறான நெருக்கடிகள் இருந்தாலும் பிரதான எதிரியைத் தோற்கடிப்பதற்காக சகல நெருக்கடிகளையும் புறந்தள்ளிவிட்டு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் மங்கள வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# அரசியலில் தமிழர்களும் பங்களிப்பு செய்யும் வகையில் வடமாகாண சபை அமைக்கப்படவேண்டும்

## பிரி.நாடாளுமன்ற குழு வலியுறுத்தல்

அரசியல் நடவடிக்கைகளில் தமிழர்களும் பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் வடக்கு மாகாண சபை விரைவில் ஸ்தாபிக் கப்பட வேண்டுமென பிரித்தானிய பாராளுமன்ற சங்க பிரிதிநிதிகள்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள போல் மேர்சி தலைமையிலான பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை பாராளுமன்றத்தில் அவரது உத்தியோகபூர்வ காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இந்த முன்னேற்றங்கள் ஏற்படுவதை விரைவில் காண்பதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் இந்த சந்திப்பின் போது நாங்கள் சுட்டிக்காட்டினோம் என அக்குழுவின் தலைவர் போல் மேர்சி தெரிவித்தார்.

சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், அதுமட்டுமன்று வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் இதன் போது இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களையும் சென்று பார் வையிடவிருக்கின்றோம்.

நாங்கள் வடக்கு, கிழக்கில் சமுகத் தலைவர்களையும் சந்தித்து பேசி அங்கு அபிவிருத்தி பணிகள் எவ்வாறு நடக்கின்றன என்பது தொடர்பில் ஆராயவிருக்கின்றோம்.

இலங்கையில் ஆட்சி நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீடொன்றை இக்குழ மேற்கொள்ளவிருக்கின்றது.

இந்தச் சந்திப்பின்போது நல்லிணக்க நடவடிக்கைகளானது முன்னேற்றம் கண்டு வருவதாக சபாநாயகர் சுட்டிக் காட்டினார். அதற்கு பின்னர் சபாநாயகர் வழங்கிய மதிய போசன விருந்துபசாரத்திலும் குழு கலந்து கொண்டது. (ஸ்ரீ-2)

# இலங்கையின் அணுத்திட்டம் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

அணுத்திட்டம் குறித்து அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸ் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாடலீ சம்பிக்க ரணவக்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையின் அணுத்திட்டம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அணுமின் உற்பத்தி குறித்து இலங்கை கவனம் செலுத்தி வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மீள் சுழற்சி சக்தி வளத் திட்டங்கள் வரவேற்கப்பட வேண்டி யவை எனவும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் அணு மின் உற்பத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு செயற்படுகிறது மன்னிப்புச்சபை

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபை அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டையும் நாட்டு பொருளாதாரத்தையும் சீர் குலைக்கும் நோக்கில் சர்வதேச மன்னிப்புச் சபை செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளதுடன் சர்வதேச தந்திரோபாயக் கற்கைநெறிசார் கல்வி நிறுவகத்தில் நடத்திய விரிவுரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டே மன்னிப்புச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி . சலுகைத் திட்டம் வழங்கப்படுவது குறித்து ஆராயப்பட்ட காலத்திலேயே சர்வதேச மன்னிப்புச் சபை யுத்தக் குற்றச் செயல் விவகாரங்களை பிரச்சாரப் படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் திட்டமிட்ட நோக்கம் இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் அம்பலப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் முன்னிலையிலும் சர்வதேச மன்னிப்புச்சபை சாட்சியமளிக்க முன்வரவில்லை எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு கட்டளைகளை பிறப்பிக்க முடியாது என்றும் அவற்றுக்கு அடிபணிய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



# ஓய்வூதிய வசதியற்றோருக்கு விசேட ஓய்வூதியத் திட்டம்

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள போதிலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதவர்களை இலக்காகக் கொண்டு விசேட ஓய்வூதியத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது 3 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் அதிகமாவர்கள் அதன் உறுப்புரிமையை பெற்றுள்ளதாகச் சபையின் தலைவர் நிமல் அமரசிங்க குறிப்பிடுகிறார்.

இது தொடர்பாக மேதிலக தகவல்களை 0112811611 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளமுடியுமென அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பஸ்ஸில் பயணித்த 18 பேரும் பலி

(ஹனோய்)

வியட்நாம் நாட்டின் மத்திய பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதுவரை இந்த மழைக்கு 41 பேர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் வியட்நாமின் மத்திய பகுதியில் உள்ள நிகி சுயான் மாவட்டத்தில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இந்த வீதியில் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதுடன் இந்த பஸ்ஸை தேடும் பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த பஸ் நேற்று முன்தினம் வரை கண்டு பிடிக்கப்படவில்லையெனவும் அதில் பயணித்த 18 பேரும் பலியாகியிருப்பார்கள் என பொலிஸார் கூறுகின்றனர். (ஸ்ரீ-2)



ஜெர்மனியின் சான்சிலர் ஏஞ்சிலா மெர்கல் (இடது), ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வேதேவ் (மத்தியில்) மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி (வலது) ஆகியோர் டௌவிலியில் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தருவதை படத்தில் காணலாம்.

# அமெரிக்க இராணுவ தலைமையகம் மீது துப்பாக்கிச் சூடு; இருவர் காயம்

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் மீது மர்ம நபர் ஒருவர் திடீர் துப்பாச் சூடு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகனின் தெற்கு பிளாக் பகுதியை நோக்கி மாலை 4.55 மணியளவில் மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கியால் சுட்டான்.

இதனால் அதிர்ச்சியடைந்த பென்டகன் பாதுகாப்புப் படை முகவர்கள் பதில் தாக்குதலுக்கு தயார் ஆயினர். சுமார் 45 நிமிடம் நீடித்த இந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பாதுகாப்புப் படைவீரர்கள் காயமடைந்தனர். உயிர் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை.

எனினும் துப்பாக்கிச் சூடு நடத்தியது யார் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

இது குறித்து பென்டகன் பாதுகாப்புப் படை முகவர்களின் இயக்குநர் ஸ்டீவன் கிளாவரி கூறுகையில் , பென்டகனின் தெற்கு பகுதியானது பொதுமக்கள், பாதசாரிகள் வந்து போகும் பகுதியாகும் அவர்களில் யாரேனும் ஒருவர் தான் இத்தாக்கு தலை நடத்தி இருக்க வேண்டும். தற்போது தெற்கு பிளாக் பகுதி மூடப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)




# மியன்மார் பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு கடும் நெருக்கடி

## இராணுவ அரசே வெற்றி பெறும் நிலை

(யாங்கூன்)

மியன்மார் தேர்தலில் இராணுவ ஆதரவுடன் செயல்படும் கட்சிகளே வெற்றி பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. மற்ற எதிர்க்கட்சிகளுக்கு கடும் நெருக்கடி கொடுக்கப்படுவதால் அவர்கள் தேர்தலில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.மியன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது. கடைசியாக அங்கு கடந்த 1990இல் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆங்சாங் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி வெற்றி பெற்றது. இருந்தாலும் இராணுவ ஆட்சியாளர்கள் ஆங்சாங் சூகி பதவியேற்பதை அனுமதிக்கவில்லை. தற்போது சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பல்வேறு நாடுகள் மற்றும் ஐ.நா ஆகியவை வழங்கிய நெருக்கடி காரணமாக அடுத்த மாதம் 7 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என இராணுவ அரசு அறிவித்தது.

இந்தத் தேர்தல் நேர்மையாக நடக்காது எனக் கூறி சூகி கட்சியினர் போட்டியிடப் போவது இல்லை என அறிவித்தனர். இருந்தாலும் அவரது கட்சியைச்சேர்ந்த ஒரு சிலர் தேர்தலில்போட்டியிடுகின்றனர். இந்நிலையில் தேசிய ஒற்றுமை மற்றும் மேம்பாட்டு கட்சி (யு.எஸ்.டி.பி) மற்றும் தேசிய ஒற்றுமை கட்சி (என்.யு.பி) ஆகிய இரு கட்சிகளுமே பெரும் பாலான தொகுதிகளில் போட்டியிடுகின்றன. இந்த இரண்டு கட்சிகளும் இராணுவ ஆதரவுடன் செயல்படுபவை. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் அமைச்சர்கள் உட்பட 14 பேர் இடைநிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தங்களது சொத்துக்கணக்கை சரியாக தேர்தல் ஆணையத்திடம் காண்பிக்கரத அமைச்சர்கள் உட்பட பாராளுமன்ற மாகாண சட்டமன்ற உறுப்பினர் 148 பேர் அதிரடியாக வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டள்ளனர்.

பாகிஸ்தானில் பாராளுமன்ற மாகாண சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் தங்களது சொத்துக்கணக்கினை தேர்தல் ஆணையத்திடம் சமர்பிக்க வேண்டும் என்பது சட்டம்.

இந்நிலையில் பாகிஸ்தானில் ஆளும் கட்சி பாகிஸ்தான் மக்களைச் சேர்ந்த எம்.பி.க்கள் மற்றும் மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் என 148 பேர் தங்களது சொத்து கணக்கினை தாக்கல் செய்யவில்லை என புகார் எழுந்தது. மேலும் இவர்களுக்கு கடந்த 16 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருந்தது. இது குறித்து தலைமை தேர்தல் ஆணையர் ஹமீத் அலி மிர்சா உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்தார்.

அதில் பாகிஸ்தானின் தேசிய அசம்பெளியான பாராளுமன்ற உறுப்பினர்கள் 34 பேர் பஞ்சாப் மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் 69 பேர், சிந்து மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் 16பேர், கைபர்பகூன்வாலா மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் 10 பேர், பலூசிஸ்தான் மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் 12 பேர் உட்பட 148 பேர் தங்களது சொத்தகணக்கினை கடந்த 16ஆம் திகதிக்குள் சமர்பிக்க வேண்டும் .

ஆனால் முறையாக சமர்பிக்கவில்லை என்பதால் இவர்களை வேலை இடைநிறுத்தம் செய்தார். வேலை நிறுத்தம் செய்யப்பட்டவர்களில் பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் 16 பேர் மற்றும் அமைச்சர்கள் அடங்குவார். என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# செச்னியா பாராளுமன்றம் மீது தற்கொலைத் தாக்குதல்

செச்னியா பாராளுமன்றம் மீது நேற்று முன்தினம் 3 தற்கொலையாளிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதில் இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதாகவும் மேலும் ஆறு அதிகாரிகளும் 11 பொதுமக்களும் காயமடைந்தாகவும் மேலும் தற்கொலை யாளிகள் மூவர் பாராளுமன்றத்துக்குள் புகுந்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் ரஷ்ய தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லும் வழியாகவே உள்ளே புகுந்த தற்கொலையாளிகள் மூவருள் ஒருவர் வாசலிலேயே தன்னை வெடிக்கவைத்துள்ளார்.

மற்றவர்கள் இருவரும் உள்ளே புகுந்து பாராளுமன்றக் கட்டட கீழ் மாடியில் மறைந்து கொண்டபோது பாதுகாப்புப் படையினர் இவர்களை தாக்க ஆரம்பித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து அவர்களும் தங்களை வெடிக்கச் செய்தனர். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் 7 இலட்சம் மக்கள் வீடுகளின்றி நிர்க்கதியான நிலையில்

## ஐ.நா.சுட்டிக்காட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் 7 இலட்சம் பேர் இன்னும் வீடுகளின்றி அலைந்து வருவதாக ஐ.நா. சபை கூறியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஜுலை மாதம் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது.இதில் பல கிராமங்கள் விவசாய நிலங்கள் உட்பட இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் தற்போதும் பாகிஸ்தானில் வீடுகளின்றி 7 இலட்சம் மக்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதாக ஐ.நா. அதிகாரியொருவர் கூறினார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வெள்ளத்தால் 1.9 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இங்கு பாதிக்கப்பட்ட 21 மில்லியன் மக்களுக்காக ஐ.நா.2 பில்லியன் டொலர் நிதியுதவியினை பாகிஸ்தானுக்கு வழங்கியது.ஆனால் 35 சதவீத மக்கள் மட்டுமே நிவாரண நிதியைப் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானில் இன்னும் 14 மில்லியன் மக்கள் உடனடி உதவியை எதிர்பார்த்துள்ளனர். வெள்ளம் பாதித்த 39 மாவட்டங்களில் 2.9 மில்லியன் மக்களுக்கு ஐ.நா உணவு பண்டங்களை வழங்கியதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)



தாலஸ் வெயினஸ் (25) எனும் இந்த இளைஞர் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர். கடந்த 2008 ஆம் ஆண்டு மின்சாரம் தாக்கியதில் ஏற்பட்ட தீ விபத்தில் தனது முகம் முழுவதும் கருகிப் போனது. தற்போது முகமாற்று அறுவை சிகிச்சைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

# தமிழ் அகதிகளுக்கு தாய்லாந்தில் அடைக்கலம் வழங்க வேண்டும்


## பழ.நெடுமாறன் வலியுறுத்தல்

(சென்னை)

தமிழ் அகதிகளுக்கு தாய்லாந்து அரசு அடைக்கலம் வழங்க வேண்டும் என்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் உயிர் வாழ முடியாத நிலையில் அண்மையில் அங்கிருந்து தப்பி தாய்லாந்திற்குச் சென்ற 130 தமிழர்களை அந் நாட்டு அரசு கைது செய்துள்ளது.

அவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 60 பேர் உள்ளனர். இதனிடையே அகதிகளாக தஞ்சம் புகுந்த அவர்களை திருப்பி அனுப்பக்கூடாது என்று பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.



இந்நிலையில், மனிதநேய அடிப்படையில் ஐ.நா. சபையின் அகதிகள் ஆணையமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இப் பிரச்சினையில் தலையிட்டு தமிழ் அகதி களுக்கு பாதுகாப்பும், புனர்வாழ்வும் வழங்க வேண்டும் என்று பழ.நெடுமாறன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ் அமைப்புகளும் கட்சிகளும் ஐ.நா. அகதிகள் ஆணையருக்கு கடிதங்களை அனுப்பவேண்டும் என்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# லப்டொப் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவி கண்டுபிடிப்பு

## சென்னை அண்ணா பல்கலை மாணவர் சாதனை

(சென்னை)

லப்டொப்பைப் பயன்படுத்தும்போது ஏற்படும் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவியை சென்னை அண்ணா பல்கலைஇ.சி.இ. மாணவர் கண்டு பிடித்து அசத்தியுள்ளார். அம்மாணவரை துணைவேந்தர் மன்னர் ஜவகர் பாராட்டினார். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் இ.சி.இ.பிரிவில் மூன்றாம் ஆண்டில் படிக்கிறார் சன்னிசர்மா என்ற மாணவர்.

அமெரிக்காவின் இல்லினோயிஸ் பல்கலைக்கழகத்தில் படித்த இம்மாணவர், பின் அண்ணா பல்கலைக்கழகத்தின் கிண்டி பொறியியல் கல்லூரியில் இ.சி.இ. பிரிவில் சேர்ந்தார். சன்னிசர்மா, லப்டொப்பைப் பயன்படுத்தும் போது ஏற்படும் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

தனது கண்டுபிடிப்பு குறித்து மாணவர் சன்னிசர்மா கூறுகையில், லப்டொப்பை பயன்படுத்தும்போது, குறிப்பிடத்தக்க அளவு வெப்பம் வெளியாகிறது. இந்த வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிட்டேன். கடந்த இரண்டு ஆண்டு முயற்சியின் மூலம் அதில் வெற்றி கண்டுள்ளேன். இதன்படி ஒருவகை படிகத்தை பயன்படுத்தி லப்டொப்பை பயன்படுத்தும்போது ஏற்படும் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

"பைரோ எலக்டீக் எபெக்ட்" என்ற முறையின்படி வெப்பசக்தி மின்சக்தியாக மாற்றப்படுகிறது. லப்டொப் வெப்பம் மூலம் 3.8 வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன்மூலம் எல்.இ.டி பல்பை எரிய வைக்க முடிகிறது. இதற்கு 300 ரூபாய் வரையே செலவானது. இந்த மின்சாரத்தை பயன்படுத்தி லப்டொப்பை மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்ய முடியும். மேலும் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட கருவிகளையும் சார்ஜ் செய்யமுடியும். இதுமட்டுமன்றி வாகனங்கள், விமா னங்கள் உள்ளிட்ட பல்வேறு வெப்பத்தை உருவாக்கும் கருவிகள் மூலமாகவும் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும்.

மேலும் குளிரிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் குறித்தும் ஆராய்ச்சி செய்து வருகிறேன் என்று சன்னிசர்மா கூறினார். அண்ணா பல்கலை துணைவேந்தர் மன்னர் ஜவகர் முன்பாக மாணவர் சன்னிசர்மா தனது கண்டுபிடிப்பை செயற்படுத்திக் காட்டினார். அப்போது லப்டொப்பில் இருந்து வெளியாகும் வெப்பத்திலிருந்து உருவான மின்சாரம் மூலமாக எல்.இ.டி. பல்பு எரிய வைத்து காணப்பிக்கப் பட்டது. (ஸ்ரீ-2)

# கடைசிவரை போராடி புலிகள் மீதான தடையை நீக்குவோம்

## தீர்ப்பாய விசாரணையின் பின் வைகோ தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை இரத்துச்செய்வதா அல்லது நீடிப்பதா என்பதை விசாரிக்கும் மத்திய தீர்ப்பாயத்தின் கூட்டம் ஊட்டியில் நேற்று நடந்தது. இந்தக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ இந்த விசாரணை நம்பிக்கை தருகிறது. கடைசிவரை போராடுவோம் என்றார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பதை விசாரிப்பதற்காக சட்டவிரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி விக்ரமஜித் தலைமையில் மத்திய தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது.


ஊட்டியில் நேற்று காலை 11 மணிக்கு நடந்த இந்தக் கூட்டத்தில் தீர்ப்பாயத்தின் தலைவர் டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி விக்ரமஜித் தலைமையில் 13 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த அமர்வின்போது நேரில் ஆஜரான ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, பழ. நெடுமாறன் ஆகியோர் இந்த விவகாரத்தில் தீர்ப்பாயத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மத்திய உள்துறை அதிகாரி பி.கே.மிஸ்ரா விடம் குறுக்கு விசாரணை நடந்தது.

பி.கே.மிஸ்ரா 'விடுதலைப்புலிகள் ஆதரவு எல்லா மாநிலங்களிலும் பரவியிருக்கிறது. நாடு கடந்த தமிழீழ அரசு அமைப்பதற்கான சாட்சியங்கள் இருக்கின்றன. இந்த அமைப்பின் மூலம் பல கிளர்ச்சிகள் நடக்கின்றன. எனவேதான் தடை விதித்திருக்கிறோம்.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளில் இந்த இயக்கத்திற்கு தடை உள்ளது என்றா கூறுகிறீர்கள்.



உடனே அதற்கு பதிலளித்த வைகோ, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டார்.

தடை இல் லை என்பதற்கு உங்களுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்டார்.

ஊடகங்கள் தான் அதற்கு ஆதாரம் என்று வைகோ தெரிவித்தார்.

பின்னர் மத்திய தீர்ப்பாயத்தின் அடுத்த கூட்டம் சென்னையில் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் உரையாற்றிய வைகோ, இந்த விசாரணை நம்பிக்கை தருகிறது. கடைசிவரை போராடுவோம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டதால் அதிகம் பாதிக்கப்பட்டவர் நெடுமாறன் ஐயாதான். கடைசிவரை போராடி தடையை நீக்குவோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மதுரை அ.தி.மு.க.வின் கோட்டையாக மாறுமா?

## அழகிரி பதில்

மத்திய மந்திரி மு.க.அழகிரி நேற்று முன் தினம் மாலை 5மணிக்கு மதுரையில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது மதுரையை அ.தி.முக. கோட்டையாக மாற்றுவேன் என ஜெயலலிதா கூறி உள்ளாரா என்றகேள்விக்கு மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற படத்தில் வரும் கதையை பற்றி கூட்டத்தில் பேசியிருப்பார் என்று பதிலளித்தார். மதுரைகூட்டத்தில் ஜெயலலிதா உங்களை விமர்சனம் செய்து உள்ளாரே? அரசியல் நாகரீகம் தெரியாமல் மேடையில் வந்து ஏதோ உளறி சென்றதற்கு எல்லாம் பதில் சொல்ல விரும்பவில்லை.

மதுரையில் அழகிரி ராஜ்ஜியம் நடப்பதாக ஜெயலலிதா கூறி உள்ளாரே? யாரோ தப்புதப்பாக எழுதி தந்ததை சரியாக உள்ளதா என்று விசாரிக்காமல் அந்த அம்மையார் அப்படியே 2மணிநேரம் படித்துவிட்டு போயிருக்கிறார் என்றார். (ஸ்ரீ-2)




# புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி சென்னையில் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வலியுறுத்தி சென்னையில் நேற்று முன்தினம் மாலை கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுவதாக நேற்று முன் தினம் காலையில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

இதைத்தொடர்ந்து சென்னை பத்திரிகையாளர் மன்ற வளாகத்தில் நேற்று முன் தினம் மாலையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ம.தி.மு.க விடுதலை சிறுத்தைகள், பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர், தேசிய விடுதலை இயக்கம், தமிழர் தேசிய பொதுவுடைமைக் கட்சி, பெண்கள் அமைப்பினர், கவிஞர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உட்பட ஏராளமான அமைப்புக்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்துகொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி கையெழுத்திட்டனர்.

இதில், ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்து உயிர்நீத்த முத்துக்குமாரின் சகோதரி தமிழரசி முதல் கையெழுத்திட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், தனி ஈழம் என்ற முத்துக்குமாரின் கனவு இன்றும் நிறைவேறாமல் உள்ளது. அவருடைய கனவு நிறைவேற எல்லோரும் இன உணர்வுடன் போராட வேண்டும். முள்வேலியலில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் விடுதலை பெறவேண்டும். இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப் படவேண்டும் என்று தமிழரசி கூறினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், தமிழ் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பத்மநாபன், சித.த. பச்சியப்பன், கவிஞர் புலமைப்பித்தன், பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த விடுதலை ராஜேந்திரன், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் தியாகு, கவிஞர் தாமரை, கவிஞர் அறிவுமதி ஆகியோர் இயக்க கூட்டத்தினரோடு வந்திருந்தனர்.


இந்த கையெழுத்து இயக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்த இயக்குநர் புகழேந்தி, " தடைகளைகத் தாண்டி இந்த கையெழுத்து இயக்கம் பெரும் திரளான மக்கள் ஆதரவோடு வெற்றிபெற்றது. இதனை, தமிழக ஆளுநரிடம் அளிப்பதாக அல்லது தீர்ப்பாயத்திடம் கொடுப்பதா என்று மற்ற ஆதரவு இயக்க தலைவர்களுடன் கலந்துபேசி முடிவெடுக்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# சந்திரபாபு நாயுடு கைது

ஐதராபாத்தில் முன்னேறும் உலகத்திற்கான அறிவியல் அகடமியின் வருடாந்த கூட்டத்தை பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன் தினம் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இதன்போது விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக, பிரதமர் மன்மோகன்சிங்கை முன் னாள் முதல் மந்திரியும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு சந்தித்துப் பேச விரும்பினார். ஆனால் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், பிரதமர் வருவதற்கு முன் சந்திரபாபு நாயுடுவும், அவரது கட்சித்தொண்டர்களும் பேகம்பேட் விமான நிலையத்தின் அருகே 'தர்ணா' போராட்டம் நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்களை பொலிஸார் கைது செய்தனர். (ஸ்ரீ-2)





வட மாகாண கல்வித் திணைக்களமும் யாழ். கல்வி வலயமும் இணைந்து நடத்திய வட மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் ,ஆசிரிய ஆலோசகர், சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கான ஆங்கில உரையாடல் செயலமர்வு யாழ்.கல்வி வலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மாகாணக் கல்வித்திணைக்கள ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் ந.சோமஸ்கந்தராசா, வவுனியா மாவட்ட கல்வித்திணைக்கள ஆங்கிலப்பாட இணைப்பாளர் திருமதி பெனடிக் ஆகியோர் செயலமர்வு நடத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

# பல்அறுவைச் சிகிச்சையால் மாரடைப்பு ஏற்படும் அபாயம்

## பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

பல் நோய்க்கு சிலர் அறுவை சிகிச்சை மேற்கொள்கின்றனர். இதனால் பக்கவாதம் மற்றும் மாரடைப்பு போன்றவை ஏற்படும் வாய்ப்பு அதிக அளவில் உள்ளதாக பிரித்தானிய ஆராயச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பக்கவாதம் மற்றும் மாரடைப்பு நோய்கள் பல்அறுவை சிகிச்சைக்குப்பின் 4 வாரத்திற்குள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளனர்.

இந்த நோய்கள் பக்டீரியாக்களாலும் உடலில் ஏற்படும் ஒவ்வாமை காரணமாகவும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு கடுமையான வரம்பு மீறிய சிகிச்சையாலும் ஏற்படுகின்றது என்றும் அறிவித்துள்ளனர்.

உடலில் ஏற்படும் ஒவ்வாமை இதயத்தில் இருந்து வரும் இரகசிய இரத்தக்குழாய்களில் பாதிப்பை உண்டாக்கி இரத்த ஓட்டத்தை தடை செய்கின்றன. இதனால் மரடைப்பு மற்றும் பக்க வாதம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# அன்னதான கலாசார மண்டபத் திறப்புவிழா

வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிதியுதவியுடன் வவுனியாவில் அமைத்த அன்னதான கலாசார மண்டபம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர் வி.எஸ். தேவகுமாரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த வைபவத்தில் இந்து மாமன்றத்தின் சார்பாக மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி.கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் , உப தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், மாமன்ற கட்டடக் குழுத் தலைவர் எஸ். ரி. எஸ். அருளானந்தன், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர் விடைக் கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, மாமன்ற அறங்காவல் சபை உறுப்பினரும் மற்றும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவருமான வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கின்றனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளது ஆசியுடன் மாமன்றத் தலைவர் மனித நேயர் வி. கயிலாசபிள்ளை மேற்படி மண்டபத்தை திறந்து வைப்பார்.

ஏ -9 பாதை ஊடாக பயணம் செய் பவர்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாக இந்த மண்டபம் அமைய வேண்டும் என்ற நன்னோக்கம் கருதி , அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபைக்கு 74 இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை நிதியுதவியாக வழங்கி இக் கட்டடத்தை அமைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள வடமராட்சி கிழக்கு மக்கள்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வடமராட்சி கிழக்கு மக்களுக்கான போக்குவரத்துப் பாதையாக மருதங்கேணி ஊடான பாதையே பயன்பாட்டில் இருக்கின்றது.

இதன் ஊடாகவே யாழ்ப்பாணத்திற்கும் வேறு இடங்களுக்கும் போக்குவரத்தில் ஈடுபட முடியும். இங்கு காணப்படும் பாலம் (மருதங்கேணிப்பாலம்) கடுமையாக சேதம் அடைந்து காணப்படுகின்றது.

இதன் ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில் இருந்து மக்கள் கீழிறக்கப்பட்டு அந்தப்பாலம் கடந்த பின்னர் மக்கள் மீண்டும் பேருந்தில் ஏறி பயணத்தில் ஈடுபடவேண்டியுள்ளது. அந்தப் பகுதிக்கு பாரவூர்திகளில் கொண்டு செல்லப்படும் பொருட்களும் இவ்வாறு இறக்கி ஏற்றப்படுகிறது.

இதனால் பயணிகளும் அந்தப் பயணத்தில் ஈடுபடும் நோயாளிகளும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சிலவேளைகளில் சேதமடைந்த பாலத்தினூடாக பேருந்துகளும் சரி வேறுவாகனங்களும் சரி செல்லும் போது அந்த வாகனங்களின் சில்லுகள் சேதமடைகின்ற நிலை காணப்படுகின்றது.

எனவே இந்த பாலத்தினை புனரமைக்க பொறுப்பேற்ற நிறுவனமோ அல்லது அரச அதிகாரிகளோ மக்களின் போக்குவரத்தை கருத்தில் கொண்டு அந்தப் பாலத்தினை துரிதமாக புனரமைத்து போக்குவரத்தை சீராக நடை முறைப்படுத்த உதவ முன்வர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இல்லாவிட்டால் தமது போக்குவரத்தை சீராக நடைமுறைப்படுத்துவதற்கு மருதங்கேணி, நாகர்கோவில், பருத்தித்துறை வீதி ஊடான போக்குவரத்தை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)

# மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை

## நோயாளர்கள் பெரும் சிரமம்



(கரவெட்டி)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வரு வதாகவும் இதனால் பொதுமக்களும் நோயாளிகளும் பெரும் பாதிப்பு அடைந் துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் தினமும் பலநூற்றுக்கணக்கான மக்கள் வெளி நோயாளர் பிரிவிலும் மற்றும் நோயாளர் விடுதிகளிலும் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் அவர்களுக்கான சிகிச்சை களை வழங்க வைத்தியர்கள், குழந்தை வைத் திய நிபுணர்கள், தாதிமார்கள், பற்றாக் குறையினால் உரிய நேரத்தில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க முடியாத நிலை காண்ப்படுகின்றன.

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களையும் பாதிப்பையும் அடைந்துள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் வைத்திய சாலையின் ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு பொதுமக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளையில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் இலட்சுமிகாந்த சத்தியோதவக் குருக்கள் பூஜைகள் நடத்துவதையும் கிளை முகாமையாளர் அ.மகாதேவா, நாதஸ்வரக்கச்சேரி வழங்கிய கலாபூசணம் இணுவையூர் சுந்தரமூர்த்தியை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

உங்கள் கடமையை முழு விருப்புடன் செய்யுங்கள். அதன் மூலம் மன நிறைவும் மகிழ்ச்சியும் தொடர்ந்து கிடைக்கும்.
~ எம்.மால்ட்ஜ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஜனாதிபதியின் கவனத்திற்கு மக்கள் தெரியப்படுத்த வேண்டும்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வவுனியாவில் தெரிவித்த சில கருத்துக்கள் குறித்து இவ்விடத்தில் பிரஸ்தாபிக்க வேண்டியுள்ளது.

அதில் ஒரு விடயம் அரச அதிகாரிகள் தொடர்பில் மக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ளமையாகும்.

அரச அதிகாரிகள் தமது கடமையை செய்வது மட்டுமல்ல, அதனை நேர்த்தியாகவும், விரைவாகவும் செய்தாக வேண்டும். அதில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய பயன்பாடு பற்றி அறிவதும் அவசியம்.

இது விடயத்தில் வடபுலத்திலுள்ள அரச அதிகாரிகள் பலர் நேர்த்தியாக செயற்படுகின்ற போதிலும் சிலரிடம் காணப்படும் குறைபாடுகள் மக்களுக்கு வெறுப்பையும் வேதனையையும் அளிப்பதாக உள்ளன.

பதவியை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுவோரால் மக்கள் துன்பத்திற்கு மேல் துன்பத்தையே அனுபவிப்பர்.

நாமிருக்கின்ற பதவிகளால் மக்களுக்கு எந்தளவு உதவிகளை செய்ய முடியுமோ அந்தளவுக்கு நாம் உதவிகளை செய்தாக வேண்டும்.

ஆனால் சில அதிகாரிகள் மக்களுடன் பாய்ந்து விழுவது, சீறிச்சினப்பது என தம்மிடம் இருக்கக்கூடிய மனச் சுகவீனத்தை வெளிப்படுத்துகின்றனர்.

மக்கள் பணி செய்வதில் கடினமிருக்குமாயின் அந்தப்பதவியிலிருந்து விலகி வேறு பதவியை பெற்றுக்கொள்வது உத்தமம்.

இது பற்றியெல்லாம் இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தோம். எந்தப்பயனுமில்லை.

இதைச் சொல்லும் போது அப்படியானால் ஏன் மீண்டும் எழுதுகிறீர்கள் என்ற கேள்வி உங்களிடம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

இங்குதான் ஒரு கருத்தை முன்வைக்க வேண்டி உள்ளது. அதாவது அதிகாரிகள் செம்மையாக செயற்படவில்லையாயின் அது பற்றி உரிய ஆதாரங்களுடன் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்பதே அதுவாகும்.

இதற்கு அப்பால் இன்னுமோர் விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். அதிகாரிகள் தமது கடமையை ஒழுங்காக ஆற்ற வேண்டும். அவ்விதம் கடமையை ஒழுங்காக செய்யும் போது உயரதிகாரிகளைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.

"ஒழுக்கம் பற்றி அதிகமாகப் பேசுகின்ற பெண்கள் விடயத்தில் விழிப்பாக இருங்கள்" என்ற கிரேக்க தத்துவம் போல்,

மிகப் பெரும் படோபகாரமாக வரவேற்பை வழங்குவோர் குறித்தும் கவனமாக இருப்பது நல்லது.

நேர்மையோடு நடக்கும் எவரும் போலி வேடம் தரிக்க மாட்டார்கள் என்பது சத்தியம்.

# வன்னிப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கு தளபாடங்கள், கணனிகள் வழங்கும் நிகழ்வு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இணைந்து மேற்படி பாடசாலைக்கான தளபாடங்கள், கணனிகளையும் வழங்கி வைக்கவுள்ளனர்.

இதற்கான விஷேட நிகழ்வு கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரியில் நாளை நடைபெறுகின்றது.

இதில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கான தளபாடங்கள், கண்னிகள், ஆய்வுகூட உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கான தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் நாளை மறுதினம் முள்ளியவளை வித்தியாணந்தா கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இணைந்து வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நாளை மறுதினம் மாலை முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கவுள்ளார். (ச-5)

# கொலைச் சந்தேக நபர் 4 வருடங்களின் பின் கைது

## வடமராட்சியில் சம்பவம்

(கரவெட்டி)

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நான்கு வருடங்களின் பின் நேற்றுக் காலை அவரது வீட்டில் வைத்து வல்வெட்டித்துறை விசேட குற்றப்பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொற்றாவத்தை சமரபாகு பகுதியில் 2006ம் ஆண்டு தனது மனைவி மற்றும் நான்கு மாதக் கைக்குழந்தையுடன் வசித்து வந்த வேளை சம்பவதினத்தன்று மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மனைவியை வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவரின் உறவினரால் வல்வெட்டித்துறை. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து கொலைச்சந்தேக நபரை பொலிஸார் தேடிவந்தனர்.

சந்தேகநபர் அவரது வீட்டில் தங்கியிருந்தவேளை பொலிஸாருக்கு இரகசிய தகவல் வழங்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்து. பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவ்வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் திருமதி ஜொய்மகிழ் மகாதேவா சந்தேக நபரை எதிர்வரும் 3ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-24)

# கசிப்பு வைத்திருந்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டனர். சுன்னாகம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்தே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கை விசாரணை செய்த நீதவான் ஏ.ஆனந்தராஜா இருவருக்கும் 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்டமாக விதித்ததுடன் அதனைக் கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் தீர்ப்பளித்தார். (ச-6)

# கஞ்சா வைத்திருந்தவருக்கு 10ஆயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குற்றவாளி நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி ஏ.ஆனந்தராஜா 5 மாத சிறைத்தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தவேண்டும் என உத்தரவிட்டார். (ச-6)

# கணபதி ஹோம பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் கோவில் அஷ்டோத்தர சத கலசாபிஷேகம் சகித கணபதி ஹோம பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 6.00 மணிக்கு காலை பூசை ஆரம்பமாகி காலை 7.00 மணிக்கு புண்யாஹவாசனம், அஷ்டோத்தர சதகலாஅபிஷேகம் தொடர்ந்து ஹோமகிரியையை அடுத்து விசேட தீபாராதனை, பஞ்சமுக அர்ச்சனை என்பன நடைபெறும். (ஸ்ரீ)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ வல்லை சிவகுரு வித்தியாசாலையின் பரிசளிப்புவிழா வல்வெட்டித்துறை பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணாணந்தன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

# நீ தயாராக இரு பாபா

வயதுத் தன்மையோ என்னவோ ஆணவம், திமிர் மற்றும் அலட்சியப் போக்குடன் வாழ்ந்து வந்தேன். எனது நண்பர்கள் சிலர் சத்யசாயி பாபா பக்தர்கள். அவர்கள் பாபாவின் கருணையினைப் பற்றி பேசும் போதெல்லாம் நான் அதனை மறுத்து அவர் ஒரு வேடதாரி. உதட்டுக்குச் சாயம் பூசி; பொய்யான தலைமுடியை வைத்து ஏமாற்றுவித்தை காட்டுகிறார் என்பேன். இவ்வாறு இருக்கும் போது ஒரு நாள் என் நண்பர்கள் கேட்டார்கள் புட்டபர்த்தி போவோமா என்று. நானும் ஆம் என்றேன். காரணம் இவர்களுக்கு பாபா பொய்யானவர் என்பதை நிருபிக்க வேண்டும் என்பதற்காக.

ஒருவாறு புட்டபர்த்தி போய் சேர்ந்தோம்.சனக் கூட்டம் வெகுவாக இருந்தது. இருந்தும் கூட்டத்தின் முன்னணி வரிசையில் இடம் பிடித்தோம். சாயிபாபா மேடையில் வந்து அமர்ந்து சொற்பொழிவாற்றத் தொடங்கினார். சொற்பொழிவில் ஆரம்ப உரை என்னைப் பற்றியதாகவே எனக்குப்பட்டது. சிலர் என்னைச் சந்தேகக் கண்ணால் பார்க்கின்றனர். உதட்டுக்குச் சாயம் பூசுகிறேனா? பொய்முடி வைத்து இருக்கிறேனா? சோதனை இடவே வந்து இருக்கிறார்கள்.

நிறையப் பணம் செலவழித்து; பல நூறு மைல்களுக்கப்பால் இருந்து இங்கு வந்து இருப்பது இதற்குத் தானோ? அவர்கள் பணமும்; நேரமும் வீண். அதை விடுத்து நான் சொல்லும் செய்திகளைக் கேளுங்கள். சோதித்து பின்பற்றுங்கள். புறத்தோற்றத்தில் செலுத்தும் கவனத்தை அகத்தோற்றத்தில் திருப்பினால் என்னை உணர முடியும். ஆனால் ஒன்றுமட்டும் நான் அழைக்காமல் யாரும் இங்கு வர முடியாது என்றருளி பாபா சென்றுவிட்டார்.


பாபா சொல்லச் சொல்ல இருக்கையில் இருந்து நெளிந்தேன். எழுந்து வரமுடியவில்லை. என்னை யாரோ தடுப்பது போல் உணர்ந்தேன். என் இதயமோ இது வித்தையல்ல சத்யம் என்று உரைத்தது. நம் அறிவுக்கும்; ஆற்றலுக்கும் அப்பால் ஒரு மகத்தானசக்தி மனித உருவெடுத்து செயற்படுகின்றது என்று தோன்றியது. என் இதயம் அவரை இறைவனாக ஏற்றுக் கொண்டது. பாபா உங்களைச் சரணடைந்து விட்டேன். நீங்களே எனக்கு எல்லாம். அகங்காரம் மறைந்து என் ஒவ்வொரு மூச்சும் சாயி;சாயி என்றே வாங்குகின்றது என்கிறார். மதுரையைச் சேர்ந்த P.S இலட்சுமணமூர்த்தி.



கமரா உன்னை நோக்கியே உள்ளது. எப்போது கிளிக் செய்வேன் என்று யார் அறிவார். ரெடி என்று கூட கூறமாட்டேன். ஆனால், நீ எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இதுவே எனது தாரக மந்திரம் என்கின்றார் பாபா.

ஜெய் சாய்ராம்

யாதவன்






நெல்லியடிக்கிளை ஹற்றன் நஷனல் வங்கியின் 6 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது.
இதில் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம் உரையாற்றுவதையும் மற்றும் வங்கி அலுவலர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# வடக்கின் வசந்தத்தின் கீழ் இருவருடங்களில்

# 5457.15 மில்லியன் ரூ.செலவில் 3263 செயற்றிட்டங்கள்

## வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தெரிவிப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களில் 5457.15 மில்லியன் ரூபா செலவில் 3 ஆயிரத்து 263 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களி லும் இடம்பெயர்ந்த 343466 பேரில் இவ் வருடம் ஒக்டோபர் வரை 320156 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

எஞ்சியுள்ள 23310 பேரை மீள் குடிய மர்த் துவதற்கான துரித நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதம செய லாளர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

வடமாகாண அபிவிருத்தி செயற்பாட்டு மீளாய்வுக்கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியா இராணுவத் தலைமையக கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாகாண அபிவிருத்தி மீளாய்வு அறிக்கையை சமர்ப்பித்து உரை யாற்றுகையிலேயே மாகாண பிரதம செய லாளர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்; கல்வி, சுகாதாரம், மீள் குடியேற்றம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மின் விநியோகத் திட்டங்கள் வடக்கில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் உள்ளூராட்சி சபைகள் உலக வங்கி ஆகிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜனா திபதியின் அபிவிருத்திச் செயலணி என்ப வற்றினூடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங் கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவ துடன் பெரும்பாலான திட்டங்கள் நிறைவு செய் யப்பட் டும் உள்ளன.

குறிப்பாக யுத்தத்தினால் இடம் பெயர்ந்த வர்களில் பெருமளவிலானோர் மீள்குடியேற் றப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உத வித்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.


கல்வித் துறையில் மேற்கொள்ளப் பட் டுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் இவ் வாண் டில் 97 பாடசாலைகள் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளதுடன் அவற்றுக்கென 458.21 மில் லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும் 243 பாடசாலைகள் புனரமை பக்கப்பட்டுள்ளன இவற்றுக்கு 226 மில் லியன் ரூபா செலவில் பாடசாலை உபகரணங் கள் சீருடைகள் மற்றும் கணனி இயந் திரங்கள் ஆகியன பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் உட்பட ஏனை செயற்திட்டங்களுக்காக 260 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களில் பாதிக்கப்பட் டுள்ள பாடசாலைகளை புனரமைத்தல் கணனி கற்கை நிலையங்களை ஆரம்பித்தல் மற் றும் மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் ஆங்கில மொழிப் பயிற்சி நிலையங்களை உருவாக்குதல் போன்ற திட் டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுகாதாரத் துறை அபிவிருத்தித் திட்டங்க ளில் புதிய கட்டடங்களை நிர்மாணித்தல், கட்ட டங்களைத் திருத்துதல், வைத்திய உபகர ணங்கள், மருத்துவப்பிரிவுகள், வாகனங் கள் மற்றும் விடுதிகள் புனரமைப்பு போன்ற திட்டங்களுக்காக 1132 மில்லியன் ரூபா கடந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடப்பட் டுள்ளது.

இவ்வாண்டு தொடக்கம் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு வரையிலான அபிவிருத் தித் திட்டங்களில் மீள்குடியேற்றப் பகுதிக ளிலுள்ள வைத்திய சாலைகளை நிர்மாணித் தல் மற்றும் புனரமைத்தல் மற்றும் கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய வைத்தி யசாலைகளுக்கான மருத்துவ உபகரணங் களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் பிரதேச வைத்தியசாலை புனரமைப்பு உள் ளிட்ட திட்டங்களுக்கென 1691 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. உள்ளூ ராட்சி



சபை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 437கிலோ மீற்றார் நீளமான வீதிப் புனரமைப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற் கென 293.55 மில்லியன் ரூபாவும் செல விடப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இவ் ஆண்டு களில் 1838 மில்லியன் ரூபா செலவிடப்பட் டுள்ளதுடன் இதன் மூலம் 9399 கிலோ மீற் றர் உள்ளூராட்சிச் சபை வீதிகள், நெடுஞ் சாலைகள், விவசாயம் மற்றும் நீர்ப்பாசன திட்டங்களுக் கான வீதிகள் புனரமைக்கப்பட்டுள் ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட் டங்களுக்கான நீர் விநியோகத் திட்டங்களுக் கென 164000 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளதுடன் மாகாண மின் விநியோகத் திட்டத்திற்கென 120.56 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (ஸ்ரீ-2)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு பார்சிக் நிறுவனம் உதவி

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங் கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட சங்கப் பிரதி நிதிகளுக்கும் (கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்) பார்சிக் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்குமான படகு இயந்திரம் கொடுப் பனவு தொடர்பான கூட்டம் கடந்த திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதி களில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப் பட்ட சங்கங்களான ஆழியவளை கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 16 படகு,16 இயந்திரம் என்பனவும் மற்றும் உடுத்துறை சங்கத்திற்கு 13 படகு,13 இயந்திரம் என்பன வும் வத்திராயன் சங்கத்திற்கு 16 படகு ,16 இயந்திரம் என்பனவும் மற்றும் மருதங் கேணி, தாளையடி ,செம்பியன் பற்று, மாமுனை ஆகிய கடற்தொழிலாளர் சங்கங் களுக்கு தலா 05 படகு , 05 இயந்திரம் என வும் மொத்தமாக ஏழு கடற்தொழிலாளர் சங் கங்களுக்கும் சுமார் 65 படகுகளும் 65 இயந் திரங்களும் வழங்கு வதாகவும் பார்சிக் நிறு வனம் ஒப்புதல் அளித் தது.

இதில் படகு ஒன்றின் விலை ஒரு இலட் சத்து 37 ஆயிரத்து 200 ரூபா எனவும் இயந் திரம் ஒன்றின் விலை 2 இலட் சத்து ஆயிரம் ரூபா எனவும் இதில் படகின் பெறுமதி யில் 50 ஆயிரம் ரூபா மானி யம் எனவும் இயந்திரத் தில் 50 ஆயிரம் மானி யம் எனவும் மிகுதிப் பணம் மாத அடிப்படை யில் கட்டவேண்டும் எனவும் தெரி விக் கப்பட்டது.(ஸ்ரீ-64)




# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் — 10.09.1953
ஆண்டவன் அடியில் — 18.10.2010

அமரர் திரு.இராமநாதன் சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற அதிபர் S.L.P.S-I யா/சண்டிலிப்பாய் அ.த.க பாடசாலை)

எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் அமரர் திரு.இராமநாதன் சண்முகநாதன் அவர்கள் கடந்த 18.10.2010 அன்று காலமானார். அவர்களுக்கு எமது கண்ணீர் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!சாந்தி!!சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச்சங்கம். பழையமாணவர்கள் சங்கம் ,
கட்டாயக்கல்விக் குழு, யா/சண்டிலிப்பாய் அ.த.க பாடசாலை.

(சி-1443)


# வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுள்ள தென்னிலங்கை மீனவர்கள்

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அப் பிர தேச மீனவர்களுக்கு முழுமையான கடற் றொழிலை செய்வதற்கு அனுமதி வழங்கப் படாத நிலை காணப்படுகின்றது.

அப்பகுதி இராணுவ அதிகாரிகளும் இது தொடர்பான அரச அதிகாரிகளும் தென் இலங்கை பெரும்பான்மையினத்தைச்சேர்ந்த 600 இற்கு மேற்பட்ட மீனவர்களை மணற் காடு பொற்பதி பகுதிகளில் தங்கி நின்று மீன் பிடி தொழில் செய்வதற்கு அனுமதி அளித் துள்ளனர்.

இதனால் அவர்கள் கடற்றொழிலில் ஈடு பட்டு வருவதாகவும் இதனால் தமது கடல் வள மும் சுரண்டப்படுவதுடன் தமது இயல்பு வாழ்க் கை மற்றும் தமது தொழில்களும் பாதிக்கப் பட்டுள்ளதாக அப்பகுதி மீனவர்களும் கடற் றொழிலாளர் சங்கங்களும் தெரிவித்துள்ள னர்.

அப்பகுதி கரையோர மக்கள் கடற் தொழி லையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலயுத்தம், சுனாமி அனர்த்தம், கடற் றொழிற் தடைகள் போன்ற வற்றினால் தமது தொழில் ,வாழ்வாதாரம் தமது கடற் றொழில் உபகரணங்களையும் இழந்து நிர்க்கதியாகி யுள்ளனர்.

இவர்கள் அண்மையில் முழுமையாக மீன்பிடிக்க அனுமதிக்காத நிலையில் ஓரா வேறும் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்தனர்.

சில தினங்களுக்கு முன் 12 தொகுதிக ளாக இப்பகுதிகளுக்கு வந்துள்ள பெரும் பான்மை இன மீனவர்கள் 600 இற்கு மேற் பட்டோர் அனுமதி பெறாது அப்பகுதிக ளில் தங்கி மீன் படித் தொழிலை செய்து வருவ துடன் 275 இற்கு மேற்பட்ட இயந்திரப் படகு களை கரையோரங்களில் நிறுத்தி வைத்துள் ளனர். இதனால் அப்பகுதி மீனவர்கள் வெகு வாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக உரியதரப்பினருக்குமுறைப்பாடுசெய்யப்பட்டன.

இதற்கு கடற்றொழிற் சங்கப் பிரதி நிதி களையும் மீனவர்களையும் சந்தித்த உரிய தரப்பினர் பெரும்பான்மை இன மீனவர்களை கொட்டோடைப் கடற் பகுதியில் மீன் பிடிக்க அனுமதி அளித்துள்ளனர்.


இதனால் தமது தொழில் மற்றும் வாழ்வா தாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(ஸ்ரீ-24)

# ஹோலி, ரெய்னா அபாரம் ஆஸியை வீழ்த்தியது இந்தியா

(விசாகப்பட்டினம்)

ஹோலி, ரெய்னாவின் அதிரடியில் ஆட்டம் கைகொடுக்க இந்திய அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரை 1:0 பூச்சியம் என்ற கணக்கில் முன்னணியைப் பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பணயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்



டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி கொச்சியில் நடைபெறவிருந்த முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக இரத்தானது. தொடரின் இரண்டாவது போட்டி நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு மார்ஷ் பூச்சியத்துடனும், பெய்யின் 09 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் கிளார்க், ஹசி ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இந்த ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 25.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் மைக்கல் கிளார்க் 77 பந்துகளிலும், ஹசி 61 பந்துகளிலும் அரைச்சதத்தைப் பெற்றனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்களைப் பெற்றபோது மைக்கல் ஹசி 77 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 67 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த வைற் அதிரடியான ஆட்டத்தை வழங்க அவுஸ்திரேலிய அணி 44.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தொட்டது.

மறுமுனையில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 133 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்து



அசத்தினார்.

இறுதியில் அதிரடியாக ஆடிய கபரூன் வைற் 38 பந்துகளில் அரைச் சதத்தைப பூர்த்திசெய்ய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 139 பந்துகளில் (7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உட்பட) 111 ஓட்டங்களையும் கபரூன் வைற் 49 பந்துகளில் (6 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 89 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

பந்துவீச்சில் ஆசிஸ் நெகரா 2 விக்கெட்டுக்களையும் அஸ்வின் ஒரு விக்கெட்டடையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 290 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் தவான் பூச்சியத்துடனும் முரளி விஜய் 15 ஓட்டங்களுடனும் வெளியேற 8.2 ஓவர்களில் 35 ஓட்டங்களையும் எடுத்து 02 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி-யுவராஜ் ஜோடி பொறுப்பாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

இதில் விராட் ஹோலி 69 பந்துகளிலும் யுவராஜ் சிங்க 64 பந்துகளிலும் அரைச்சதத்தைப்பூர்த்திசெய்தனர்.

இதில் யுவராஜ் சிங் 87 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 58 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சுரேஸ் ரெய்னா அமைதியாகத் துடுப்பெடுத்தாடி இந்திய அணி 37.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது. இதில் விராட் ஹோலி 111 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். எனினும் விராட் ஹோலி 121 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 118 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் தோனி பூச்சியத்துடன் வந்தவேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

அடுத்து திவாரி களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சுரேஸ் ரெய்னா அரைச் சதத்தைப் பூர்த்திசெய்து அதிரடியில் அசத்தினார்.

இந்நிலையில் இந்திய அணி 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 292 ஓட்டங்களைகுவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் சுரேஸ் ரெய்னா 47 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும் அறிமுகவீரர் திவாரி 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்திவீச்சில் மைக்கேய் 03 விக்கெட்டுக்களையும், ஹேஸ்ரிய் 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறுகிறது.

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு நாளை மறுதினம் காலை 9.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் க.இ. இராஜசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ச-5)


## வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வெளிவாரிப் பரீட்சைகள் -2009

1. இசைமாணி / நடனமாணி முதலாம் வருடம்.
2. இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடம்.
3. இசைமாணி / நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்.

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபாய் 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபாய் 100/= க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபாய் 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 30.11.2010 (செவ்வாய்க்கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசிஎண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**20.10.2010** (சி-1445)


# யாழில் தொழில் இல்ல அலுவலகத்தை அமைச்சர் காமினி திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தி திறன் அமைச்சர் காமினி லொக்குகே எதிர்வரும் 25ஆம் திகதி வட பகுதிக்கான விஜயத்தை மேற்கொள்கிறார் 25ஆம் திகதி வவுனியாவிற்குவரும் அமைச்சர் மறுநாள் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது நாவலர் வீதியில் இலக்கம் 133இல் உள்ள தொழில் இல்ல அலுவலகத்தை அமைச்சர் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். இதில்வேலையற்ற இளைஞர், யுவதிகள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இத்தினத்தில் மத்திய வங்கி, தொழில் திணைக்கள ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர்நம்பிக்கை நிதியம் என்பன இணைந்து நடமாடும்சேவையினையும் நடத்தவுள்ளன.

இந்நிகழ்வில் வீரசிங்கம் மண்டபத்தின் நான்காம் மாடியில் உள்ள தொழில் திணைக்களத்தில் இதுவரை காலமும் பதிவுகளை சமர்ப்பித்து உரிய முறையில் கணக்குகளை தொடரமுடியாதவர்களுக்கும், தேசிய அடையாள அட்டையில் பிழை உள்ளவர்களும் இதன்போது திருத்திக் கொள்ள முடியும்.

இதேவேளை உற்பத்தி திறன் பிரிவினால் யாழ்.பல்கலைகழகம், குருநாகர் வடகடல் நிறுவனம் என்பனவற்றுக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவு சங்கமண்டபத்தில் உற்பத்தி திறனை விருத்தி செய்வதற்கான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. அத்தோடு உப்பு கூட்டுத்தாபனத்தால் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈட்டு கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது இதனை அமைச்சர் காமினி லொக்குகே தொழிலாளர்களுக்கு வழங்குவார். நஷ்ட ஈட்டு தொகையில் பெறுமதி, பணிபுரிந்த காலம், வயது எல்லை என்பனவற்றால் மதிப்பிடப்படும் என உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரம் தெரிவித்தார். (ச-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் 06.10.2010 அன்று நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்று 17.10.2010 அன்று 25ஆவது பிறந்த நாளை கொண்டாடிய செல்வி

**யோகநாதன் ஜெனிதா (B.A)**

அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெறவாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :-
அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, நண்பர்கள்.

வரணி,
நாவற்காடு.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# முப்பது பாடசாலைகளை புனரமைக்க ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியுதவி

## கொரிய அரசு முன்வருகை

(திருகோணமலை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 பாடசாலைகளை புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியை வழங்க கொரியா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து நிதிவழங்கலுக்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள கொரிய குழு ஒன்று எதிர் வரும் 27ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள் ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப் பட்ட பாடசாலைகளை புனரமைப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கமைவாக வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் கொரிய அரசாங்கத்திடம் முன் வைக்கப்பட்டது. இதற்கு அமைவாக கிளிநொச்சி மாவட் டத்தில் 30 பாடசாலைக ளுக்கு புதிதாகக் கட்டிடத் தொகுதி களை அமைத்துக் கொடுப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியை வழங்குவதற்கு கொரியா முன்வந்துள்ளது.

இது தொடர்பில் நேரில் ஆராய்ந்து நிதி வழங்குதலுக் கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு கொரிய குழு வினர் எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜ யம் செய்கின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் போரி னால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் புனரமைப்புக் கான நிதியுதவியை இந்திய அரசிடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (ச-5)

# எல்.ஓ.எல்.சி.நிறுவன அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

எல்.ஓ.எல்.சி.லீசிங் கம்பனியின் புதிய கிளை அலுவலக கட்டடத்திறகான அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை 9.45 மணிக்கு இடம்பெறும்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப் ரால் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டுவார். (ச-5)

# அரசு வெளியிட்ட புகைப்படம் துவாரகாவினுடையதல்ல!

## பிரி. தமிழர் பேரவை தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் புதல்வி துவாரகா கடந்த வருடம் இடம்பெற்ற யுத்தத்தில் கொல்லப்பட்டார் என்று அரச ஊடகங் கள் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி சில காலத்துக்கு முன் செய்தி வெளியிட்டிருந்தன.

அச்செய்திக்கு ஆதரவாக துவாரகாவின் உடல் என்று புகைப்பட, வீடியோ ஆதாரங்களையும் அவ்வூடகங் கள் வெளிப்படுத்தி இருந்தன. ஆனால் அவை துவார காவினுடையது அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனால் அவ்வுடல் துவாரகாவின்னுடையது அல்ல என்றும் புலிகளின் ஊடகப் பிரிவான நிதர்சனம், புலிகளின் வானொலியான புலிகளின் குரல் ஆகியவற்றில் அறிவிப் பாளராக கடமையாற்றிய இசைப்பிரியா (வயது 28) என் பவர் உடையது என்றும் பின்னர் தகவல் கசிந்தது.

அத்துடன் துவாரகா செத்துவிட்டார் என்கிற செய்தி யும் அடங்கிப்போய்விட்டது. இந்நிலையில் பிரித்தானிய தமி ழர் பேரவையால் யுத்தக் குற்ற ஆதாரங்கள் என்று புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் புகைப்படங்களில் ஒன்றில் இசைப் பிரியாவின் சடலத்தை அடையாளம் காண முடிகின்றது.

சரண் அடைந்திருந்த தமிழர்களில் ஒரு தொகை யினர் கடந்த வருடம் மே 18ஆம் திகதி காலை இராணு வத்தால் அழைத்துச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களில் ஒரு சிலருடைய சடலங்களே இவை என்றும் அடித்துக் கூறுகிறது பிரித்தானிய தமிழர் பேரவை.

ஆனால் பேரவையின் இப் புகைப்பட ஆதாரங் கள் பொய்யானவை என்றும் போலியானவை என்றும் ஒரேயடியாக மறுத்திருக்கின்றார் பிரித்தானியாவுக்கு உத்தி யோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் வெளி நாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ். (ச-5)

# விடுதலைப்புலிகள் வளர்...

கருணா அம்மானே மன்னிப்புக் கேட்க வேண் டும்.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளி னால் பொலிஸார் பலவந்தமாக கொல்லப்பட் டமை குறித்து இலங்கையில் நல்லிணக்கத் தை ஏற்படுத்துவதற்காக மன்னிப்புக் கோர முடியுமா என ஆணைக்குழு உறுப்பினர் ஒரு வர் கேட்டார்.

1990ஆம் ஆண்டு நான் விடுதலைப் புலி உறுப்பினரல்ல. அச்சமயம் பாடசாலை மாண வனாக இருந்தேன். அத்துடன் பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டதாக நான் கேள்விப்பட் டேன். 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியே நான் இயக்கத்தில் இணைந் தேன். அதனால் அன்று தலைவராக இருந்த கருணா அம்மானே மன்னிப்புக் கோர வேண் டும் என பதிலளித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுத முறை மற்றும் பயங்கரவாத முறைகளின் ஊடாகவே வளர்ச்சியடைந்தது.

அன்று போராளிகள் ஹில்டன் ஹோட்டலில் தங்குவதற்கு இடம் வழங்கப்பட்டது. அவ்வாறு தங்கியவர்களே அமிர்தலிங்கத்தை கொன்றார் கள். அன்று பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத் தில் படையினருக்கு எதிராக புலிகள் போரை பிரகடனம் செய்தனர். அதனாலேயே இன்று இவ்வளவு பாரிய அழிவு ஏற்பட்டுள்ளது.

அன்று படை வீரர்களால் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு கொல்லப்படும் போது, அவர்கள் முஸ்லிம் பெயர்களை பயன்படுத்தி னர். அதாவது கப்டன் முனாஸ் போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். இதனால் ஊர்காவற்துறையில் பணியாற்றும் முஸ்லிம் களே இக்கொல்லகளை செய்வதாக தமிழ் மக்கள் நினைத்தனர். ஆனால் கொலை மேற் கொண்டது படையினரே.

அரசியல்வாதிகள் விட்ட பிழையினை பிர பாகரனும் விட்டதனாலேயே நான் அதிலிருந்து பிரிந்தேன். அவர் ஒரு போதும் அரசியல் தந் திரத்தை உபயோகிக்கவில்லை. அத்துடன் சூழல் மாற்றத்திற்கு ஏற்ப இயக்கத்தை மாற்ற மடையச் செய்யவுமில்லை என்றார். (ச-5)

# தேடப்படும் குற்றவாளி...

தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து 1994ல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் சமீபத்தில் இந்தியா சென்ற அமைச்சரை கைது செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் உரிமை கழகம் சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது. ஆனால் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில் டக்ளஸ் தேவாணந்தா இலங்கை திரும்பினார். அந்த வழக்கும் நிலுவையில் இருக்கிறது.

இந்நிலையில் டக்ளஸ் தேவாணந்தா, தான் குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருப்பதை இரத்து செய்யவேண்டும் எனக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். நீதிபதி அக்பர் அலி இந்த வழக்கின் விவரம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி விசார ணை நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டு இருந்தார்.

அதன்படியே அமர்வு நீதிபதி பரஞ்சோதி யின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் டக்ளஸை 1994ம் ஆண்டு தேடப்படும் குற்றவாளி என அறிவித்து விசாரணை நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது உண்மைதான் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவின் வழக் கறிஞர் வஜ்ரவேலு, சம்பந்தப்பட்ட அறிவிப்பு பொது அறிவிப்பாக முறையாக விளம்பரப்ப டுத்தப்படவில்லை.

பத்திரிகை செய்திகள் வழியாகவே தெரிய வந்திருக்கிறது, எனவே விசாரணை நீதிமன் றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண் டும் என்று வாதிட்டார். இதையடுத்து வழக்கு விசாரணை இன்றுவரை ஒத்தி வைக்கப்பட் டிருக்கிறது. இன்றையதினம் அரசு தரப்பில் பதில் அளிக்க வேண்டும் என்றும் நீதிபதி அக் பர் அலி தெரிவித்தார். (ச-5)

# இரண்டு சிம் அட்டைகளு...

வேண்டும் என்ற கட்டுப்பாடும் விதிக்கப்படவுள்ள தாக அறியமுடிகின்றது.

சர்வதேச அழைப்புக்களை சட்டவிரோத மாகப் பெற்று விநியோகிப்பதை கட்டுப்படுத் தும் நோக்கில். அரசாங்கம் இந்த நடவடிக்கை யை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும் உண்மைக் காரணம் அதுவல்ல என்று தெரியவருகின்றது.

அண்மையில் கிளிநொச்சியில் மாவீரர் தினத்திற்கு அழைப்பு விடுத்ததாகக் கூறிக் கைது செய்யப்பட்டவர் வைத்திருந்த சிம் கார்ட் தென்னிலங்கை முகவரியில் பதியப்பட்டிருந்த தாக தெரியவருகின்றது.


அதுமாத்திரமன்றி அவர் இரண்டுக்கும் மேற்பட்ட சிம்கார்ட்களை வைத்திருந்தமை யும் விசாரணைகளின் போது தெரியவந்தி ருந்தது. எனவே புலிகளுடன் தொடர்புடைய அனைவரும் தத்தமது தொடர்புகளுக்கு ரகசிய இலக்கம் ஒன்றை பயன்படுத்தி வருவதாக அரசாங்கம் சந்தேகம் கொண்டுள்ளது.

ஏனெனில் வடக்குக் கிழக்கு மாகாணங் களின் முகவரியில் பதியப்படும் அனைத்து சிம்கார்ட்டுகளும் விசேட ஏற்பாட்டின் கீழ் அர சாங்கத்தால் கண்காணிக்கப்படுகின்றன. அப் படியிருக்கையில் சிலர் தென்னிலங்கை முக வரியைக் கொடுத்து பதிந்துள்ள சிம்கார்ட்டுக் களை வடக்கில் பயன்படுத்தி வருவதன் மூலம் அதனை அரசாங்கத்தால் கண்காணிக்க முடி யாது போய்விடுகிறது.

எனவே குறித்தஇரண்டு விடயங்களை யும் கட்டுப்படுத்த வேண்டுமாயின் ஒருவருக்கு இரண்டு சிம்கார்ட்டுக்களை மட்டுமே பயன் படுத்த அனுமதிப்பதுடன் ஒருவரின் பெயரில் பதிந்துள்ள சிம்கார்ட்டை இன்னொருவர் பயன்படுத்தினால் கடும் தண்டனை விதிப் பதன் மூலமும் சந்தேகத்துக்கிடமானவர்களை கண்காணிக்க அரசாங்கம் தீர்மானித்துள் ளது. (ச-5)

# மரண அறிவித்தல்

## அருணாசலம் சோமசுந்தரம்



(கலாபூஷணம், சங்கீதபூஷணம், பண்ணிசை மணி, இசையரசு, விரிவுரையாளர் – பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, இளைப்பாறிய ஆசிரியர், யா/ கனகரத்தினம் மகாவித்தியாலயம்)

சாவகச்சேரி சரசாலையைப் பிறப்பிடமா கவும் கொழும்புத்துறையை வதிவிடமாக வும், தற்போது கோவில் வீதி நல்லூரில் வசித்து வந்தவருமான அருணாசலம் சோமசுந்தரம் நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம்) அன்புக் கண வரும், யோகராணி (முன்னாள் வட பிராந்திய Chemist -அவுஸ்தி ரேலியா), யோகதாசன் (கணக்காய்வாளர்), யோகேஸ்வரி (முதல் வர், யாழ். மாநகரசபை), யோகானந்தன் (பொறியியலாளர் - கொலண்ட்), யோகசெல்வம் (கணக்காளர்-கனடா), யோகநாதன் (தொழி லதிபர்-தனலக்ஷ்மி ஸ்ரோர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, சாவித்திரி (உப அதிபர், யா/ஸ்ரீபார் வதி வித்தியாலயம்), பற்குணராசா (செயலாளர், யாழ். மாநகர சபை முதல்வர் அலுவலகம்), அற்புதி (லண்டன்), அருணாசல முதலியார் (கனடா), தனலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், வனஜா, சஞ்சீவராஜா, யோகவிநாயகன், கார்த்திகா, உபேந்திரா, சுபேந்திரா, கஜனி, சங்கீதா, கஜானன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

இல.365, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திருமதி யோ.பற்குணராசா
முதல்வர்
யாழ்.மாநகரசபை

(இ

# வன்னியில் இறுதி யுத்தத்தின்...

ஜனாதிபதி செயலகத்தின் முன்னை நாள் தமிழ் ஊடக அதிகாரியும் ஊட கவியலாளருமான ஆர்.எப்.அஷ் ரப் அலீ என்பவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் மொழிப்பெயர்ப்பு தேவைகளுக்காக நம்பிக்கையின் அடிப்படையில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்துக்கு அழைத்துச் செல் லப்பட்டிருந்த வேளையில் தன் கண் முன்னாலேயே அவை கைப்பற்றப் பட்டதுடன் தான் கொழும்புக்குப் பய ணித்த ஹெலிகொப்டரிலேயே அது கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட் டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த தங்கம் மற்றும் பண நோட் டுக்கள் கைப்பற்றப்பட்ட விடயத்தை பாதுகாப்புத் தரப்பின் உயர்மட்ட விருப்பத்திற்கிணங்க இராணுவத் தினர் மூடிமறைத்துவிட முற்பட்ட போதும் முள்ளிவாய்க்காலிலிருந்த படியே தான் கொழும்பிலிருந்த ஊடகவியலாளர்களைத் தொடர்பு கொண்ட விடயத்தை அம்பலப்படுத் தியதன் காரணமாகவே அந்த விட யம் வெளிக்குத் தெரியவந்ததாக வும் அவர்மேலும் குறிப்பிடுகின்றார்.

மேலும் அன்று கைப்பற்றப்பட்டி ருந்த தங்க நகைகள் பெரும்பாலும் இறுதி யுத்த கட்டத்தில் உயிருக்குப் பயந்து ஓடிய பொது மக்களினால் கைவிட்டுச் செல்லப்பட்ட நகை களாக இருக்கக் கூடும் என்று தான் கருதுவதாகவும் அதற்கான ஆதாரங் கள் தன் வசம் இருப்பதாகவும் அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதுடன்,

புலிகளிடமிருந்து வேறு சந்தர்ப் பங்களில் கொஞ்சம் கொஞ்சமாக கைப்பற்றப்பட்ட தங்கமே இவ்வாறு அமைச்சரால் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் அன்றைக்கு கைப்பற்றப்பட்ட தங்கம் யாராலோ அநியாயமான முறையில் அபகரிக் கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சந்தேகம் தெரிவிக்கிறார்.

புலிகளிடமிருந்து 200 கிலோ எடை கொண்ட தங்கம் கைப்பற்றப் பட்ட செய்தி அக்கால கட்டத்தில் இலங் கையின் ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டதை அதற்கான ஆதாரமாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். (ச-5)

# பேராயர் மல்கம் ரஞ்...

பேராயரின் அருட்பணியாளர் இமானு வேல் பெர்ணாண்டோ இதனை உறு திப்படுத்தியுள்ளார்.

இலங்கை தவிர ஜேர்மனி போல ந்து, சுவிற்சர்லாந்து, ஐக்கிய அமெரி க்கா மற்றும் கொங்கோ குடியரசு ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களும் இத்தாலியின் அதிகமானவர்களும் இந்த 20 கர்தினாலாக பெயரிடப்பட் டுள்ளனர்.

வத்திக்கானில் தற்போது 102 கர்தினால்கள் செயற்படுகின்றனர். இந்நிலையில் நேற்று மேலும் 20 பேர் பெயரிடப்பட்டனர். இதற்கு முன் னர் இலங்கையில் இருந்து வணக் கத்துக்குரிய தோமஸ் பென் ஜமின் குரே 20 வருடங் களுக்கு முன்னர் கர்தினலாக தெரிவு செய்யப்பட்டிருந் தார்.

இந்த நிலையில் இலங்கை யர் ஒருவர் கர்தினாலாக தெரிவு செய்யப்பட்டமை இலங் கைக்கு கிடைத்த பெருமை யாகும். (ச-5)

பைவ் ஸ்டார் (Five Star)

பைவ் ஸ்டார் (five Star) புறோயிலர் சிக்கன் மொத்தமாகவும், சில்லறை யாகவும் பெற்றுக் கொள்ள உடன் நாடவேண்டிய ஏக விநியோகஸ்தர்;

பமிலி சுப்பர் ஸ்பொர்ட்
மானிப்பாய்.TP:0214591042

(சி-14377)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.